# 1984இல் பொருளாதாரச் செயலாற்றமும் பிரச்சனைகளும் கொள்கைகளும்

## அறிமுகம்

1984 இல், இலங்கையின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி, முன்னைய ஆண்டின் 5.0 சதவீதத்துடனொப்பிடுகையில் 5.1 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 5.3 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து, 1983 இல் பதிவு செய்யப்பட்ட 4.1 சதவீதங் கொண்ட வளர்ச்சி வீதத்தைவிட கணிசமான முன்னேற்றத்தைக் கொண்டிருந்தது. முன்னேற்றத்துக்கு 1984 இல் காரணி வருவாயின் வெளிநாட்டுக்கான தேறிய வெளிப்பாய்ச்சலே காரணமாக விளங்கி ஏறக்குறைய 1983 இல் காணப்பட்ட அதே அளவிலேயே இருந்த வேளையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தது.

அட்டவணை 1.1

**தேசிய வருமான புள்ளி விபரங்கள் 1982 - 1984**

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 1982(அ) | 1983(அ) | 1984(அ) | 1983 | 1984 |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 93,194 | 111,976 | 138,173 | 20.2 | 23.4 |
| 2. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 93,194 | 97,899 | 102,906 | 5.0 | 5.1 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 91,235 | 108,762 | 134,817 | 19.2 | 24.0 |
| 4. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 91,235 | 94,963 | 99,949 | 4.1 | 5.3 |
| 5. நடுவாண்டுக் குடித்தொகை ('000) ... | 15,189 | 15,416 | 15,599 | 1.5 | 1.2 |
| 6. தலைக்குரிய மொ. தே. உ. (ரூபாய்களில்) | 6,007 | | | | |
| (i) நடைமுறை விலைகள் ... | 6,007 | 7,055 | 8,643 | 17.4 | 22.5 |
| (ii) நிலையான விலைகள் ... | | 6,160 | 6,407 | 2.5 | 4.0 |


(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் அளவிடுகையில் மொத்தத் தேசிய உற்பத்தி 1984 இல் ரூ. 134,800 இலட்சமாக மதிப்பிடப்பட்டு 1983ஐ விட 24 சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டியது. உண்மையான மொத்தத் தேசிய வருமானத்தின் அதிகரிப்பினையும் எடுத்து நோக்குகையில் 1984 இல் உள்ளடக்க மொத்தத் தேசிய உற்பத்திச்சுருக்கி 17 சதவீதமாக மதிப்பிடப் பட்டது. இது 1983 இல் பதிவு செய்யப்பட்ட 16 சதவீத மாற்றத்தைவிடச் சிறிதளவில் உயர்ந்ததாகும். முக்கியமாகத் தேயிலை, இறப்பர் ஆகியவற்றின் உயர்விலைகளே இதற்குக் காரணமாகும்.

பதிவாளர்நாயகத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி இலங்கையின் குடித்தொகை 1984 இல் 1.2 சதவீதத்தால் அதிகரித்தது. குடித்தொகையிலேற்பட்ட இவ்வதிகரிப்புடன் தலைக்குரிய உண்மை வருமானம் 1983 இன் 2.5 சதவீதத்துடனொப்பிடுகையில் 4 சதவீதத்தால் அதிகரித்தது. நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 8,643 ஆக (1984ஆம் ஆண்டிற்கான செலாவணியின் சராசரி வீதத்தில் 340 ஐ. அ. டொலர்கள்) மதிப்பிடப்பட்டது.

## மொத்தத் தேசிய உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

1984 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் துறைவகைப்படியான அமைப்பின் ஆய்வானது உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியிலேற்பட்ட 5.1 சதவீத அதிகரிப்பு பெருமளவில் தயாரிப்பிலும், பணிகளிலுமான திருந்திய செயலாற்றத்தின் விளைவாகுமென்பதைக் காட்டுகிறது. 1983ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வேளாண்மைத்துறையில் தெங்கு, நெல் ஆகியவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தவிர வருவாய் உருவாக்கம், வேளாண்மைக்கும் பணிகளுக்கும் பெருமளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய அனைத்துத்துறைகளிலும் கூடியளவு சமமான வளர்ச்சி காணப்பட்டது. தயாரிப்புத் தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதியின் வளர்ச்சி 1984 இல் 12.3 சதவீதமாக விளங்கியது. இது முன்னைய ஆண்டைவிடக் கணிசமான அளவு உயர்ந்ததாகும். அதேவேளையில் கடந்த சில ஆண்டுகளில் உயர்ந்த வளர்ச்சி வீதத்தைப் பேணிய பணிகள்துறை 1984 இல் 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. வேளாண்மைத்துறையின் வளர்ச்சி குறிப்பிடத் தக்க அளவில் வேகங்குறைந்து 2.2 சதவீத வளர்ச்சியை மட்டுமே கொண்டிருந்தது. கட்டடவாக்க நடவடிக்கைகளிலும் ஒரு சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டது.

அட்டவணை 1.2

**மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியும் உள்ளடக்கமும் 1982–1984**
**நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்**


| துறை | தொஉ.க (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | |
|---|---|---|---|---|---|
| | 1982 (அ) | 1983 (அ) | 1984 (அ) | 1983 | 1984 |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ... | 24,964 | 26,294 | 26,866 | 5.3 | 2.2 |
| இதில்: ... ... | | | | | |
| 1.1 தேயிலை ... ... | 2,418 | 2,309 | 2,681 | – 4.5 | 16.1 |
| 1.2 இறப்பர் ... ... | 770 | 865 | 878 | 12.3 | 1.5 |
| 1.3 தெங்கு ... ... | 3,263 | 2,992 | 2,564 | – 8.3 | –14.3 |
| 1.4 நெல் ... ... | 5,484 | 6,318 | 6,166 | 15.2 | – 2.4 |
| 1.5 ஏனையவை (சிறு உணவுப் பயிர்கள், காட்டுத் தொழிலும் கடற்றொழிலும் உட்பட) ... | 13,029 | 13,810 | 14,577 | 6.0 | 5.6 |
| 2. சுரங்க அகழ்தலும், கல் உடைத்தலும் ... | 2,238 | 2,413 | 2,449 | 7.8 | 1.5 |
| 3. தயாரிப்புத் தொழில் ... ... | 13,601 | 13,710 | 15,390 | 0.8 | 12.3 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... ... | 2,846 | 2,715 | 2,983 | – 4.6 | 9.9 |
| 3.2 ஏனையவை ... ... | 10,755 | 10,995 | 12,407 | 2.2 | 12.8 |
| 4. கட்டடவாக்கம் ... ... | 7,959 | 8,039 | 8,030 | 1.0 | – 0.1 |
| 5. பணிகள் ... ... | 44,432 | 47,443 | 50,171 | 6.8 | 5.8 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... ... | 93,194 | 97,899 | 102,906 | 5.0 | 5.1 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... | – 1,959 | – 2,936 | – 2,957 | — | — |
| 8. மொத்தத் தேசிய உற்பத்தி ... ... | 91,235 | 94,963 | 99,949 | 4.1 | 5.3 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பல துணைத்துறைகளின் செயலாற்றம் கடந்த சில ஆண்டுகளில் எதுவித நிலையான வளர்ச்சிப் போக்கினையும் காட்டவில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் மாற்றமடையும் துறைவகைப்படியான மூலங்களில் இது பிரதிபலிக்கப்பட்டது. 1984 இல் வேளாண்மைத்துறையின் குறைந்த செயலாற்றம் நெல், தெங்குத் துணைத்துறைகளிலேற்பட்ட எதிர்க்கணிய வளர்ச்சியின் விளைவேயாகும். 1983 இல் முன்னெப்போதுமில்லாத உயர் வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்த நெல்லின் கூட்டப்பட்ட பெறுமதி 1983–84 பெரும்

## கைத்தொழில் மூலங்களின்படியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்




இலங்கை மத்திய வங்கி

போக நெற்பயிருக்கு வெள்ளத்தினுல் ஏற்பட்ட சேதத்தின் காரணமாக 2 சத வீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டில் நிலவிய பாதகமான காலநிலை நிலைமைகளினுல் தெங்கு உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக கூட்டப்பட்ட பெறுமதியில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டது. இறப்பர் 1.5 சதவீதமாகச் சிறிதளவு வளர்ச்சியைக் காட்டியது. நெல்லினதும் தெங்கினதும் வீழ்ச்சியின் பாதகமான தாக்கம் தேயிலையின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட 16 சதவீத அதிகரிப்பினுல் விஞ்சுமளவில் எதிரீடு செய்யப்பட்டது. ஏனைய வேளாண்மையிலேற்பட்ட வளர்ச்சி தொடர்ந்தும் உயர்வாகவேயிருந்தது. 1984 இல் முன்னணி வளர்ச்சித்துறையாகக் காணப்பட்ட தயாரிப்புத் தொழில் பெருமளவில் திருந்திய செயலாற்றமொன்றினைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் அதிகரித்த தேயிலை உற்பத்தி மரப் பயிர் பதனிடலில் கூட்டப்பட்ட பெறுமதியின் வளர்ச்சியின் 10 சதவீதமான பங்கை வழங்கியது. இது முன்னைய ஆண்டின் எதிர்க்கணிய வளர்ச்சியை விடக் கணிசமான முன்னேற்றத்தைக் கொண்டதாகும். 1983 இல் 2 சதவீதத்தால் மட்டும் அதிகரித்த தொழிற்சாலைக் கைத்தொழில் 1984 இல் 15 சதவீதங் கொண்ட பெருமளவான அதிகரிப்பைப் பதிவு செய்தது. தனியார்துறைக் கைத்தொழில், அரசதுறைக் கைத்தொழில் இரண்டிலும் இவ்வுயர் வளர்ச்சி பிரதிபலிக்கப்பட்டது.

பணிகள் துறையின் வளர்ச்சி, மொத்த விற்பனை, சில்லறை விற்பனை வர்த்தகத்தின் அதிகரித்த கூட்டப்பட்ட பெறுமதியின் பெருமளவு செல்வாக்கிற்குட்பட்டது. இறக்குமதி ஏற்றுமதி வர்த்தக நடவடிக்கையின் உயர்மட்டமானது பணிகளின் வளர்ச்சி வேகத்தினைப் பேணுவதற்கு உதவியது. ஏனைய பணிகள் துணைத்துறைகளின் வளர்ச்சி தொடர்ந்தும் மந்தமாகக் காணப்பட்டது. இதற்கு சுற்றுலாத் துணைத்துறையின் குறைந்த செயலாற்றமும் இதன் விளைவாகத் துணைப் பணிகளுக்கான கேள்வியிலேற்பட்ட மந்தமுமே முக்கிய காரணங்களாகும். 1983 இல் காணப்பட்ட பின்னடைவு நிலையிலிருந்து சுற்றுலா ஓரளவில் மீட்சி கண்டது. கட்டடவாக்கத்துறையில் சார்பு ரீதியில் தேக்க நிலைமை ஏற்பட்டமைக்கு, விரைவு படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான இரு பெரும் முன்னணிச் செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டமையே காரணமாகும். விக்ரோறியா அணையும், நீர் மின்வலுக் குகையும் மினிப்பே வலதுகரை வடி நிலக் காய்வாயும் இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டன. 1984 இல் தனியார்துறை கட்டடவாக்க நடவடிக்கையும் வீழ்ச்சியடைந்தது.

வேளாண்மையில் வேறுபட்ட துணைத்துறைகளின் சீரற்ற வெளியீட்டுக்குக் காலநிலைக் காரணிகளே பெருமளவு காரணமாகும். வேளாண்மைத்துறையில் காணப்பட்ட குறைந்த வளர்ச்சி, நெல்லினதும் தெங்கினதும் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சியினுலேயே ஏற்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு பாதகமான காலநிலைக் காரணிகளே முதற்காரணமாயிருந்ததுடன், முதற் கூறப்பட்டது வெள்ளச் சேதத்தினுல் பாதிக்கப்பட்ட வேளையில் பிந்தியது 1983 இல் வரட்சியின் பிந்திய தாக்கத்தினுல் பாதிக்கப்பட்டது. வேளாண்மைத்துறையின் முக்கியமான வெளிநிற்கும் அபிவிருத்தி, தேயிலைக் கைத்தொழில் மீட்சி பெற்றமையாகும். பெரும்போகக் காலத்தில் உணவுப் பயிர்ச் செய்கையைக் கடுமையாகப் பாதித்தஆண்டின் முதலரைப் பகுதியில் காணப்பட்ட முன்னெப்போதுமில்லாதவாறான பெரும் மழை வீழ்ச்சியும் தேயிலை உற்பத்தியின் மீட்சிக்கு உதவியது. கடந்த இரு ஆண்டுகளாகத்தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்த தேயிலை உற்பத்தி 1983 இன் மட்டத்தைவிட 16 சதவீதத்தால் அதிகரித்ததுடன் ஏறக்குறைய 1981 இல் அடையப்பட்ட உற்பத்தி மட்டத்தில் காணப்பட்டது. அதிகரித்த தேயிலை உற்பத்தியும், உயர்வான ஏற்றுமதி விலைகளும் சேர்ந்து, பல ஆண்டுகளாகச்

சாதகமற்ற இலாப எல்லைகளைப் பெற்றுவந்த அரசதுறைதனியார்துறை உற்பத்தியாளர்களுக்கு நிறைவான நிவாரணத்தை வழங்கின. தேயிலைக் கைத்தொழிலின் திருந்திய செயலாற்றம் அரசின் வரவு செலவுத் திட்ட தொழிற்பாடுகளினதும் சென்மதி நிலுவையினதும் திருந்திய செயலாற்றத்தில் பிரதிபலிக்கப்பட்டது.

தேயிலைத் துணைத்துறையில் காணப்பட்ட உயர்ச்சி, வேளாண்மைத்துறையின் ஏனைய துணைத்துறைகளில் காணப்படவில்லை. 1984 இல் இறப்பர் உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்ட போதிலும், முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 12 சதவீதத்துடனொப்பிடின், இது 1.4 சதவீதங் கொண்ட சிறிதளவான அதிகரிப்பாயிருந்தது. அரசதுறைப் பெருந்தோட்டங்களிலிருந்தே இம் முன்னேற்றம் முழுமையாக ஏற்பட்டது. முன்னைய ஆண்டின் சாதகமான வளர்ச்சி வீதத்துக்கு மாறாக, தனியார்துறையில் இறப்பர் வளர்ப்போரின் வெளியீடு 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முன் கூறப்பட்டதுபோல 1983 இன் பெரும்பகுதியில் காணப்பட்ட வரட்சியின் பிந்திய விளைவு தெங்கு துணைத்துறையின் வளர்ச்சியைக் குறைத்தது. தெங்கு உற்பத்தி 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து கடந்த அண்மைக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த உற்பத்தியினை அடைந்தது. வேளாண்மைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் தெங்கின் பங்கு அதிகளவில் இடம்பெற்றதன் காரணமாக இத்துறையின் மொத்தச் செயலாற்றத்தினை மிகவும் பாதகமாக இது பாதித்தது.

உணவுப் பயிர்த்துறையில், நெல்லும் ஏனைய சிறு உணவுப் பயிர்களும் 1984 இல் பின்னடைவினைக் கொண்டிருந்தன. பாதகமான காலநிலை காரணமாகவே இது ஏற்பட்டதெனினும், இது இத்துணைத்துறையின் வளர்ச்சிக்கான வாய்ப்புத் தன்மையில் காணப்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கவில்லை. 1983—1984 பெரும்போகத்தில் நெல் வெளியீடு 24 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது, எனினும் சிறுபோக வெளியீட்டில் காணப்பட்ட 52 சதவீதங் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பெரும்போக வீழ்ச்சியைத் தணித்தது. நீர்ப்பாசனத்தில் பெருமளவில் தங்கியிருக்கும் சிறுபோகத்தினது செயலாற்றம், நெல்துணைத்துறை உறுதியான வளர்ச்சிப்பாதையில் செல்வதைத் தெளிவாகக் காட்டுகிறது. ஏனைய சிறு உணவுப் பயிர்கள் உற்பத்தியும் பெரும்போகத்தில் காணப்பட்ட பாதகமான காலநிலை காரணமாக வீழ்ச்சியடைந்ததெனினும் ஆண்டின் இறுதியில் ஓரளவு மீட்சியினைப் பெற்றது.

1984 இல் சீனியுற்பத்தி 15 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்து, தொடர்ந்தும் வீழ்ச்சியடையும் போக்கினையே கொண்டிருந்தது. கரும்பின் ஆகக் குறைந்த உற்பத்திக்கு குறைவான நீர் முகாமைத்துவமே முக்கிய காரணமாகும். மீன்பிடித் துணைத்துறையைப் பொறுத்தவரை, முன்னைய ஆண்டுடனொப்பிடுகையில் 23 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. கரையோர மீன்பிடித் தொழிலில் காணப்பட்ட குறைந்த செயலாற்றத்தின் விளைவே இதுவாகும். பாலுற்பத்தி 3 சதவீதத்தால் அதிகரித்ததாக மதிப்பிடப்பட்டவேளையில் முட்டையுற்பத்தி சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

1984 இல் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய பங்கு தயாரிப்புத் துறையிலிருந்தே பெறப்பட்டது. தொழிற்சாலைக் கைத்தொழிலின் வெளியீடு 15 சதவீதங் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. இது தனியார்துறை (25 சதவீதம்) அரசதுறைக் கைத்தொழில் (7 சதவீதம்) இரண்டினதும் திருந்திய செயலாற்றத்தின் இணைந்த விளைவாகும். தனியார்துறைக் கைத்தொழிலினால் காட்டப்பட்ட மீளெழுச்சியானது 1983 இல் நிலவிய கலவரங்களுடன் நோக்

கும்போது குறிப்பிடத்தக்கதொரு பெறுபேறுகும். தனியார்துறைக் கைத்தொழி வின் வெளியீட்டிலேற்பட்ட அதிகரிப்பும், புடவை, ஆடைகளினதும், ஏனைய கைத்தொழில் பொருட்களினதும் ஏற்றுமதிகளிலேற்பட்ட கணிசமான அதிகரிப் பில் பிரதிபலிக்கப்பட்டது. தனியார் தொழிற்சாலைக் கைத்தொழிலின் தொடர்ச்சி யான சிறந்த செயலாற்றம் அரசினுல் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான ஊக்கு விப்புக்களின் சாதகமான விளைவினைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அவ்வாறெனினும், தனியார்துறையானது தனது செயலாற்றத்தை வலுப்படுத்த வும், உற்பத்தியிலும் முகாமையிலுமான முன்னேற்றங்களூடாக அதிக போட்டித் தன்மையைக் கொண்டதாக விளங்குவதற்கும் வாய்ப்புக் காணப்படுகின்றது.

அரசதுறைக் கைத்தொழிலின் வெளியீடு 7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும் அரசதுறையின் மொத்தச் செயலாற்றம் இத்துறையின் 55 சதவீத அளவைக் கொண்ட பெற்ருேலிய உற்பத்திகளின் வெளியீட்டின் செல்வாக்கிற்கு உட்பட்டது. இவ்வாறு பெற்ருேலியத்தூய்மியின் தொழிற்பாடு கள் அரசதுறைக் கைத்தொழில்களின் செயலாற்றத்தினைத் தொடர்ந்தும் செல் வாக்கிற்குட்படுத்தியது. தூய்மியின் வெளியீடு நீக்கப்படின் அரசதுறைக் கைத் தொழில் துறையின் வெளியீடு வீழ்ச்சியொன்றைக் காட்டியது. பெரும்பாலான அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டு முயற்சிகள், முகாமை, சந்தைப்படுத்தல், திரவத்தன்மைப் பிரச்சனைகளை எதிர்நோக்கியிருந்தன. உற்பத்தியினதும், மூல தனத்தின் வருவாய்களினதும் நியதிகளில் பொதுவாக அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகள், அவற்றில் முதலீடு செய்யப்பட்ட நிதியத்தினை இயலக்கூடியளவிற்குப் பயன்படுத்த வேண்டியிருந்தது.

வேளாண்மை உற்பத்தியினது சீரற்ற செயலாற்றம், 1984 இல் உள்ளூர் விலைகளின் மீது தாக்கத்தைக் கொண்டிருந்தது. 1984 இன் முதலரைப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட உணவு விலைகளில் பெரும் அதிகரிப்பொன்று காணப்பட்டமை க்கு, குறைந்த வழங்கல் நிலைமைகளும், நடைமுறையிலுள்ள விலைகளின் திருத் தமுமே காரணமாகும். உயர் ஏற்றுமதி விலைகளும், உள்ளூர் விலைகளில் மேல் நோக்கிய அமுக்கத்தை ஏற்படுத்தின. எனினும் ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் ஊக்குவிக்கும் திருப்பம் அவதானிக்கப்பட்டதுடன், பணவீக்க வீதத்தில் குறிப்பிடத்தக்க குறைப்பொன்று காணப்பட்டது. 1984 திசெம்பர் இறுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் பதிவு செய்யப்பட்ட, ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் (புள்ளிக்குப் புள்ளி) பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பு 1983 இன் 21 சதவீதத்துடனெப்பிடுகையில் 9 சதவீதமாக மட்டுமேயிருந்தது. அதேபோல, மொத்த விற்பனை விலைச்சுட்டெண் ஆண்டுக்கு ஆண்டு என்ற அடிப்படையில் (புள்ளிக்குப் புள்ளி) 1984 இன் இறுதியில் 5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் விலைகளில் பெரும் வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் முதலரைப்பகுதியின் உயர் விலைகள், இவ்வாண்டுக் கான ஆண்டுச் சராசரி விலைகளை, 1983 இன் தொடர்பான சராசரி விலைகளைவிட உயர்வடையச் செய்தன. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 1983 இன் 14 சதவீதத்துடனெப்பிடுகையில் 17 சத வீதத்தால் அதிகரித்ததுடன், மொத்த விற்பனை விலைச்சுட்டெண் அதே அடிப்படை யில் முன்னைய ஆண்டின் 25 சதவீதத்திற்கெதிராக 26 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் விலைகள் ஆண்டின் இறுதி வரையும் தமது வீழ்ச்சியடையும் போக்கினையே தொடர்ந்தும் கொண்டிருந்தன.

ஆண்டின் இறுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும், மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணிலும் பிரதிபலிக்கப்பட்டவாறு குறைந்த புள்ளி விலை அதிகரிப்புக்களைப் பெறுவதற்கு உதவியாக இந்த விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்குப் பல காரணிகள் ஏதுவாயிருந்தன. மிக முக்கியமான காரணிகள் குறிப்பாக உணவைப் பொறுத்தவரையில் திருந்திய வழங்கல் நிலைமைகள் அரசின் வரவு செலவுத் திட்டத்தினது பணச்சுருக்கத் தாக்கமும், கட்டுப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள் மற்றும் சேமிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவாம். இறக்குமதிப் பணவீக்க வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இணைந்த சில இறக்குமதிப் பண்டங்களின் விலைகளின் உறுதித் தன்மையும், அதனுடன் சார்புரீதியாக உறுதியான செலாவணி வீதங்களும் விலைகளில் ஏற்பட்ட குறைப்பில் பங்கெடுத்தன. விலை வீழ்ச்சிக்கான காரணிகளின் ஆய்வில் காட்டப்பட்ட குறிப்பிடத்தக்க காரணி, பணவீக்க வீதத்தைக் குறைவடையச் செய்வதில் அரச வரவுசெலவுத் திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட பங்களிப்பாகும். நடைமுறைக் கணக்கில் ஏற்படுத்தப்பட்ட சேமிப்புக்களினூடாக மூலதன வரவு செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியை நிதியீட்டுதல் வரவு செலவுத்திட்ட ஒழுங்குமுறையில் ஒரு பெரும் சாதனையாக விளங்கி கடந்த காலங்களில் ஏற்பட்ட ஒன்று சேர்ந்த அதிகரித்த வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறைகளின் பாதகமான விளைவுகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்திச் சீராக்கியது. வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையில் ஏற்பட்ட அதிகரித்த குறிப்பிடத்தக்க குறைப்புக்கள் இவ்வாண்டில் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகளுக்குத் துணையாக இருந்தது. எனினும் இம் முன்னேற்றங்களுடன் திருப்தியடையக்கூடாது. எனினும் தொடர்ந்தும் உயர்வாகவே விளங்கும் வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறைகள் உற்பத்தி, நிரம்பல் ஆகிய விடயங்களை விரிவுபடுத்துவதற்குக் கூடியளவு மூலவளங்களைத் தனியார்துறை பயன்படுத்துவதற்கு உதவும் நோக்குடன் குறைக்கப்பட வேண்டும். எனவே கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் கடுமையான வரவு செலவுத்திட்ட ஒழுங்குமுறைகளுடன் திடமான நாணயக் கொள்கை வழிமுறைகளுடன் இணைந்து மிகையான திரவத் தன்மையின் குறைத்தலை வேண்டி நிற்கின்றன. குறைக்கப்பட்டுள்ள பணவீக்க வீதம் தொடர்ந்தும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதனூடாக அவசியமான சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம் குறைந்த மட்டத்தில் நிலைநாட்டப்படுதல் வேண்டும்.

ஆண்டின் இறுதியில் விலைகளில் ஏற்பட்ட குறைந்து செல்லும் தன்மை உண்மைக் கூலிகளில் நன்மையான தாக்கத்தைப் பெற்றிருந்தது. உண்மைக் கூலிகளில் பதிவு செய்யப்பட்ட முக்கியமான முன்னேற்றம் கூலிச்சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்களுக்காகவே காணப்பட்டது. இப்பிரிவிலுள்ள தொழிலாளர்களின் உண்மைக் கூலிகள் 1.5 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு 1984 இன் முற்பகுதியில் 25.9 சதவீதப் பணக்கூலி அதிகரிப்பைப் பெற்ற வேளாண்மையிலுள்ள தொழிலாளர்களின் உண்மைக்கூலி 7.6 சதவீதத்தால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். கூலிச்சபைகளுக்குட்பட்ட கைத்தொழில் வர்த்தகப் பணிகளிலுள்ள தொழிலாளர்களினால் பெறப்பட்ட மிதமான கூலி அதிகரிப்புக்கள், அவர்களின் உண்மையான கூலிகளின் அதிகரிப்புக்குச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அரச துறையிலுள்ள குறிப்பிட்ட பிரிவுத் தொழிலாளர்களின் பணக்கூலி அதிகரிப்பும் மிதமாயிருந்தது. அரசதுறையின் தொழிலாளர்களுக்கான முக்கிய வருவாய் நலன், 1984 இல் வாழ்க்கைச் செலவு இழப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட இரு திருத்தங்களூடாகவே பெறப்பட்டது. இம்மாதிரியான கூலிச்சுட்டெண் மயமாக்கல் கேள்வி முகாமைக் கொள்கையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதுடன், வருவாய் உண்மைக் கூலிகளின் வளர்ச்சி

யுடன் நிலையான தொழிலாளர் உற்பத்தியாற்றலை விரிவாக்குவதற்கு இன்றியமையாத ஊக்குவிப்புக்களை வழங்கத்தக்க தேசிய கூலிக் கொள்கையைக் கருத்திற் கொண்டு இவை மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

உறுதியான தரவுகள் இல்லாமை தொழில் வாய்ப்பிலான அபிவிருத்திகளை மீளாய்வு செய்வதில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகிறது. இது பொருளாதாரத்தில் துறைவகைப்படியான வளர்ச்சியின் அடிப்படையில் காணப்பட்டபோதிலும், நாட்டின் தொழில் வாய்ப்பில் அதிகரிப்பேற்பட்டிருப்பதாகக் கருதுவது நியாயமானதாகும். பொருளாதாரத்தில் துறைகளின் வளர்ச்சி வெளிநாட்டுக் கூட்டுடன் அல்லது கூட்டின்றி கைத்தொழில் முயற்சிகளிலான நேரடி தொழில் வாய்ப்புக்களில் அதிகரிப்பு ஏற்பட்டதைக் காட்டுகிறது. கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளின் விரிவு கிராமியத்துறையில் வேலையில்லாப் பிரச்சனையையும், குறைவேலைப் பிரச்சனையையும் குறைத்தது. அரசதுறையின் வேலைவாய்ப்பில் சிறிதளவான அதிகரிப்பொன்று காணப்பட்டது. எனினும் அரசதுறையில் புதிய வேலைவாய்ப்பு வசதிகள், அரச மூலதனச் செலவினது கட்டுப்பாடுகளினாலும் உற்பத்தியை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளினாலும் குறைக்கப்பட்டன. அரசு சார்புடைய நிறுவனங்களில் மீளமைப்புக்கும் திறனை அதிகரிப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளும், அவற்றில் புதிய வேலை வாய்ப்புக்களைக் குறைக்கும் பாதிப்பினைக் கொண்டிருந்தன.

கடந்த காலங்களில் உள்நாட்டுச் சேமிப்புக்களில் காணப்பட்ட மந்தமான வளர்ச்சியைப் பொறுத்தவரையில், முதலீட்டின் நிதியீட்டலானது முதலீட்டுச் செலவுக்கும் கிடைக்கக்கூடிய உள்நாட்டு மூலவளங்களுக்குமிடையில் பெரும் சமமின்மையை ஏற்படுத்தியது. சாதகமற்ற பன்னாட்டுச் சூழலினதும், வீழ்ச்சியடைந்து செல்லும் வர்த்தக மாற்று விகிதத்தினதும் காரணமாக, அரச தனியார் முதலீடுகளின் உயர் மட்டத்தினைப் பேணுவதற்காகச் சேமிப்பு முயற்சிகளை அதிகரிப்பதற்கான தேவை உணரப்பட்டது. கடந்த சில ஆண்டுகளில் முதலீட்டு—சேமிப்பு இடைவெளியானது முக்கியமாக நேரடிக் கொடைகள், சலுகைக் கடன்கள் வடிவிலான வெளிநாட்டுச் சேமிப்புக்களின் துணையுடன் ஈடுசெய்யப்பட்டது. சாதகமான சென்மதி நிலுவையின் விளைவாக வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கங்களில் பெறப்பட்ட கணிசமான நன்மைகளின் காரணமாக வர்த்தகக் கடன்பாடுகளை நாடுவது வரையறுக்கப்பட்ட அளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டதுடன் 1983ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மொத்த முதலீட்டு நிதியீட்டலில் வெளிநாட்டுச் சேமிப்புக்களின் அளவு குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தது. இவ்வாறு வெளிநாட்டுச் சேமிப்புக்களின் பயன்பாடு 1983 இல் மொத்த முதலீட்டின் 42 சதவீதத்திலிருந்து 1984 இல் 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுச் சேமிப்புக்கள் முன்னைய ஆண்டின் 14.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20.8 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில் தேசிய சேமிப்புக்கள் தொழிலாளரின் பண வரவுகளினால் உயர்வடைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 23.2 சதவீதத்திற்கு அதிகரித்தன. வெளிநாட்டுச் சேமிப்புக்களின் உண்மையான உட்பாய்ச்சல் மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கும் மொத்த உள்நாட்டு முதலீட்டிற்குமிடையிலான குறையை விஞ்சியது. இதன் காரணமாக வெளிநாட்டுச் சேமிப்புக்களின் குறைந்த பயன்பாடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதத்திற்கு வகை கூறிக் கடந்த ஆறு ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டவற்றில் மிகக் குறைந்ததாக விளங்கியது. மிகையான வெளிநாட்டுச் சேமிப்புக்கள் சென்மதி நிலுவையின் பொதுவான மிகையில் பிரதிபலிக்கப்பட்டது.

## அட்டவணை 1.3

## முதலீட்டு—சேமிப்புகள் 1980 — 1984

| வகை | 1980 | | 1981 | | 1982 | | 1983 | | 1984 (அ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ப. இ. ரூபா | சதவீதம் | ப. இ. ரூபா | சதவீதம் | ப. இ. ரூபா | சதவீதம் | ப. இ. ரூபா | சதவீதம் | ப. இ. ரூபா | சதவீதம் |
| **1. முதலீடு, சேமிப்புக்கள் (உள்நாடு, வெளிநாடு)** ... | 22,465 | 100.0 | 23,610 | 100.0 | 30,276 | 100.0 | 36,063 | 100.0 | 39,850 | 100.0 |
| கழிக்க: பொருட்களும் காரணியல்லாப் பணிகளும் (தேறிய) ... | – 15,021 | – 66.9 | – 13,666 | – 57.9 | – 18,758 | – 62.0 | – 18,365 | – 50.9 | – 8,374 | – 21.0 |
| **2. மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள்** ... | 7,444 | 33.1 | 9,944 | 42.1 | 11,518 | 38.0 | 17,698 | 49.1 | 31,476 | 79.0 |
| கூட்டுக: காரணிப்பணிகள் (தேறிய) ... | – 432 | – 1.9 | – 1,868 | – 7.9 | – 1,959 | – 6.4 | – 3,214 | – 8.9 | – 3,356 | – 8.4 |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) ... | 2,260 | 10.1 | 3,918 | 16.6 | 5,494 | 18.1 | 6,441 | 17.8 | 7,039 | 17.6 |
| **3. மொத்தத் தேசிய சேமிப்புக்கள்** ... | 9,272 | 41.3 | 11,994 | 50.8 | 15,053 | 49.7 | 20,925 | 58.0 | 35,159 | 88.2 |
| **4. வெளிநாட்டுச் சேமிப்புக்கள் (1–3)** ... | 13,193 | 58.7 | 11,616 | 49.2 | 15,223 | 50.3 | 15,138 | 42.0 | 4,691 | 11.8 |
| அலுவலக மாற்றல்கள் (தேறிய) ... | 2,281 | 10.1 | 3,118 | 13.2 | 3,379 | 11.2 | 4,016 | 11.1 | 3,902 | 9.8 |
| சலுகை கடன்கள் (தேறிய) (ஆ) ... | 2,712 | 12.1 | 3,279 | 13.9 | 4,292 | 14.2 | 5,796 | 16.1 | 6,945 | 17.4 |
| வர்த்தகக் கடன்பாடுகள் (தேறிய) ... | 3,163 | 14.1 | 3,465 | 14.7 | 5,339 | 17.6 | 3,933 | 10.9 | 704 | 1.8 |
| நேரடி முதலீடுகள் ... | 710 | 3.2 | 947 | 4.0 | 1,323 | 4.4 | 887 | 2.5 | 911 | 2.3 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் பயன்பாடு... | 2,967 | 13.2 | 406 | 1.7 | 1,009 | 3.3 | – 342 | – 0.9 | – 7,062 | – 17.7 |
| ஏனைய (தேறிய) (ஈ) .. | 1,360 | 6.0 | 401 | 1.7 | – 119 | – 0.4 | 848 | 2.3 | – 709 | – 1.8 |
| **5. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக** | | | | | | | | | | |
| (i) முதலீடுகள் ... | 33.8 | | 27.8 | | 30.3 | | 29.6 | | 26.3 | |
| (ii) மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் ... | 11.2 | | 11.7 | | 11.5 | | 14.5 | | 20.8 | |
| (iii) மொத்தத் தேசிய சேமிப்புக்கள் ... | 13.9 | | 14.1 | | 15.1 | | 17.2 | | 23.2 | |
| (iv) வெளிநாட்டுச் சேமிப்புக்கள் ... | 19.8 | | 13.7 | | 15.2 | | 12.4 | | 3.1 | |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(ஆ) வர்த்தக ரீதியான கடன்பாடுகள் தவிர்ந்த அரசின் தேறிய வெளிநாட்டுக் கடன்பெறுகைகள்

(இ) சென்மதி நிலுவையின் முழுமையான மிகையை கழித்தல்—அடையாளம் காட்டுகின்றது.

(ஈ) சி. எ. உ. ஒதுக்குகள் சென்மதி நிலுவையிலுள்ள பெறுமதிச் சீராக்கங்கள், பிழைகளும் தவிர்ப்புக்களும் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தின் வளர்ச்சி, 1984 இல் மேலும் வேகங் குறைந்து, 1983 இன் 21 சதவீதத்துடனுெப்பிடின் 9 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்திருந்தது. மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான கட்டட வேலைகளின் பெரும் பங்கு முடிவடைந்தமையும் புதிய மூலதனச் செலவு அரசினுல் குறைக்கப்பட்டமையுமே மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்திலேற் பட்ட வேகங்குறைந்த வளர்ச்சிக்கு முக்கிய பொறுப்பாகும். எனினும் ஏராளமான ஊக்குவிப்புக்கள் கிடைக்கத்தக்கதாயிருந்த நிலையிலும், முக்கியமான பல துறைகளில் தனியார்துறை முதலீடு பின்தங்கியே காணப்பட்டமை கவலைக்குரிய ஒரு விடயமாகும். இக்காரணிகள் கடந்த நான்கு ஆண்டுக் காலப் பகுதியின் உயர் சராசரி விகிதமான 30 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு மூலதன ஆக் கத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 26 சதவீதத்திற்குக் கொண்டுவந்தன. எனினும் மொத்தச் செலவில் நுகர்வின் பங்கிலேற்பட்ட வீழ்ச்சியே முக்கிய மானதொரு பண்பாகக் காணப்பட்டதுடன் மூலவளங்கள் முதலீட்டுக்கு மாற்றப் பட்டதையும் காட்டுகின்றது. நுகர்வுச் செலவு, 1983 இன் 18 சதவீத வளர்ச்சி க்கு எதிராக 15 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. இந்த அபிவிருத்தியின் விளைவு யாதெனில் முன் குறிப்பிடப்பட்ட உள்நாட்டுச் சேமிப்புக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பேயாகும். கட்டுப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கைகளு டன் அதிகரித்த உள்நாட்டு உற்பத்தியுடன் இணைந்த இறை முகாமையினை மேலும் உறுதிப்படுத்துவதன் மூலம் உள்நாட்டுச் சேமிப்புக்களை உயர்மட்டத்தில் பேணுவதற்கான தேவை மிகவும் அவசியமாகவுள்ளது. வெளிநாட்டு உதவி வரவுகளில் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சிப்போக்கினையும், வளர்ச்சியடையும் கடன் தீர்ப்பனவுச் சுமையினையும் நோக்கும்போது, நுகர்வினைக் கட்டுப்படுத்தவும், உள் நாட்டுச் சேமிப்புக்களை உயர்த்தவும் வெளிநாட்டுச் சேமிப்புக்களை அதிகரிக்கவு மான கொள்கை முயற்சிகளில் எதுவித மாறுபாடும் ஏற்படக் கூடாது.

1984 இல் நாணயத்துறையிலேற்பட்ட அபிவிருத்திகள், பண, கொடுகடன் வளர்ச்சி வீதங்களின் குறைப்பினுலும் நிதியமைப்பில் திரவத்தன்மையிலேற்பட்ட அதிகரிப்பினுலும் வட்டி வீதங்களில் குறிப்பாக வைப்புக்களில் ஏற்பட்ட கீழ் நோக்கிய அசைவினுலும் ஏற்பட்டவையாகும். இந்த அபிவிருத்திகள் பணவீக்க வீதத்திலேற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினுல் மேலும் உயர்வடைந்தன. குறு கிய பணநிரம்பல் ($M_1$) 1983 இன் 25 சதவீதத்துடனுெப்பிடுகையில் 14 சத வீதத்தால் அதிகரித்தவேளையில் விரிந்த பணநிரம்பல் ($M_2$) முன்னைய ஆண்டின் 22 சதவீதத்துக்கெதிராக 17 சதவீதத்தால் அதிகரித்தது.

1984 இல் உள்நாட்டுக் கொடுகடன் விரிவின் வீதத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று காணப்பட்டது. உள்நாட்டுக் கொடுகடன் முன்னைய ஆண்டின் 16 சதவீதத்துடனுெப்பிடுகையில் 1 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. உள் நாட்டுக் கொடுகடன் வளர்ச்சியிலேற்பட்ட கணிசமான வீழ்ச்சிக்குக் கொடுகடனுக் கான அரசினதும், தனியார்துறையினதும் குறைக்கப்பட்ட கேள்வியே காரண மாகும்.

தீர்வைகளினுலும், வரிகளினுலும் பெறப்பட்ட வருவாய் அதிகரித்தமை அரசுக்குக் கிடைக்கத்தக்க மூலவளங்களை கணிசமானளவில் அதிகரிக்கச் செய்தமை யினுல் வங்கித் தொழில்முறையில் தங்கியிருத்தலை அரசு குறைத்தது. வெளிநாட்டு உதவியின் பாய்ச்சலும், திறைசேரி உண்டியல்களுக்கும், அரச பிணைகளுக்கும் வங்கி யல்லா மூலங்களிலிருந்து பெறப்பட்ட உதவுதொகை அதிகரித்தமையையும், அரச மூலவளங்களை மேலும் அதிகரிக்கச் செய்தன. இதன் விளைவாக அரசு வங்கித்தொழில் முறைக்கான வெளிநிற்கும் கடப்பாடுகளைக் குறைப்பதற்குத்

## அட்டவணை 1.4

## நாணய அளவுகள் 1980—1984

ரூபா பத்து இலட்சங்களில்

| விடயம் | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 |
|---|---|---|---|---|---|
| **உள்நாட்டுக் கொடுகடன்** ... | **10,832** | **8,163** | **8,431** | **6,895** | **633** |
| அரசுக்கான தேறிய கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ... | 6,052 | 3 817 | 4,361 | 383 | – 2,979 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ... | 776 | 365 | 190 | – 292 | – 237 |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் அதிகரிப்பு ... | – 540 | – 74 | – 106 | 635 | – 255 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் அதிகரிப்பு ... | 4,544 | 4,055 | 3,986 | 6,170 | 4,104 |
| **தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | **– 3,117** | **– 690** | **– 568** | **815** | **6,777** |
| **மொத்தச் சொத்துக்கள், பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | **7,655** | **7,473** | **7,863** | **7,710** | **7,410** |
| விரிந்த பணநிரம்பலில் (M2) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 4,803 | 4,587 | 6,063 | 6,747 | 6,170 |
| ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 2,852 | 2,886 | 1,800 | 963 | 1,240 |
| **நாணய அளவுகளில் சதவீத அதிகரிப்பு** | | | | | |
| மொத்த உள்நாட்டுக் கொடுகடனின் சதவீத அதிகரிப்பு ... | 72.4 | 31.6 | 24.8 | 16.3 | 1.3 |
| மொத்த சொத்துக்கள், பொறுப்புக்களின் சதவீத அதிகரிப்பு ... | 35.2 | 25.4 | 21.3 | 17.2 | 14.1 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசின் சதவீதம் ... | 55.9 | 46.8 | 51.7 | 5.6 | – 470.4 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசு அல்லாத்துறையின் சதவீதம் ... | 44.1 | 53.2 | 48.3 | 94.4 | 570.4 |
| விரிந்த பண நிரம்பலின் (M2) சதவீத அதிகரிப்பு ... | 31.9 | 23.1 | 24.8 | 22.1 | 16.6 |
| குறுகிய பண நிரம்பலின் (M1) சதவீத அதிகரிப்பு ... | 22.9 | 6.3 | 17.3 | 25.4 | 14.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தனது திருந்திய காசு நிலுவைகளைப் பயன்படுத்தியது. திறைசேரிக்கு மாற்றப் பட்ட ரூ. 16,500 இலட்சங் கொண்ட மத்திய வங்கியின் இலாபங்களும், மத்திய வங்கிக்கான அரசின் வெளிநிற்கும் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப் பட்டன. இந்த எல்லா அபிவிருத்திகளினதும் முடிவான விளைவு அரசுக்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட 17 சதவீத வீழ்ச்சியேயாகும்.

அரச கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவு நிலையங்களும் உள்ளடங்கிய தனியார் துறைக்கான கொடுகடன் 1983 இன் 26 சதவீதத்துடன் ஒப்பிடின் 11 சதவீதத்தால் அதிகரித்தது. தனியார் துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட வீழ்ச்சி, குறிப்பிட்ட சில அரச கூட்டுத்தாபனங்களின், குறிப்பாக இரு பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் திருந்திய நிதி நிலைமையையும், ஆண்டின் முதலரைப் பகுதியில் மத்திய வங்கியினுல் விதிக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடுகளின் விளைவாக முன்னுரிமையற்ற கொடுகடனுக்கான கேள்வியில் ஏற்பட்ட குறைப்பையும் பிரதிபலித்தது. மேலும், நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு மக்கள் வங்கியினூடாகக் கிடைக்கக்கூடிய சந்தைப்படுத்தல் மீள் நிதியிடலுக்கு விதிக்கப்பட்ட மேலெல்லைகள் காரணமாகக் கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடனும் வீழ்ச்சியடைந்தது.

வங்கித்தொழில் முறைக்கான வைப்பு மூலவளங்களின் தேறிய பங்களிப்பாளராக மாறியதன்மூலம் அரசு குறிப்பிடத்தக்க சாதனையை நிலைநாட்டியதுடன் தனியார்துறை மீதான (அரச கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் தவிர) அரசின் நிதித் தொழிற்பாடுகளின் ஒன்றுசேர்ந்த தாக்கத்தினை மாற்றியமைத்தது. கொடுகடன் விரிவில் ஏற்படுத்தப்பட்ட மேலெல்லைகளுக்குள் தனியார் துறை வர்த்தக வங்கிக் கொடுகடனுக்கு முழு உரிமையையும் பெற்றிருந்தது. அரசினுல் வங்கி மூலவளங்களை கட்டுப்பாடின்றி வழங்கல் பொருளாதார அபிவிருத்தியில் அதிகரித்த தனியார் துறைப் பங்குபற்றலினை ஊக்குவிக்கும் அரசின் நோக்குடன் இணைந்திருந்தன.

இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணய கொடுகடன் கொள்கை வழிமுறைகள் நாணய உறுதித் தன்மையையும் பொருளாதாரத்தில் அதிகரித்த திரவத் தன்மை நிலைமைக்கெதிராக அபிவிருத்தி நோக்கங்களையும் அடையக்கூடிய வகையில் பயனுள்ளனவாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப் பிரதிபலித்தன. மத்திய வங்கி மீள்நிதியிடல் திட்டங்களினூடாக வங்கிக் கொடுகடனிலேற்பட்ட விரிவினைக் குறைக்கும் முகமாகப் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்பட்ட சந்தைப்படுத்தல் மீள்நிதியிடல் வசதிகளின்மீது மேலெல்லைகள் விதிக்கப்பட்டமையும், வர்த்தக வங்கிகளுக்குக் கிடைக்கத்தக்கதாயிருந்த பொதுவான கடன் வசதிகளிலேற்பட்ட குறைப்பையும் இவை உள்ளடக்கியிருந்தன. அதேவேளையில், வழங்கலினை ஊக்குவிக்கும் நோக்குடன் கப்பலேற்ற முன்பான ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் வசதி தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தது. மத்திய வங்கியின் மீள்நிதியிடல் திட்டங்கள் மீளாய்வின் கீழ் கொண்டுவரப்பட்டன. மரபு ரீதியல்லா ஏற்றுமதிகளுக்கு ஆதரவளிப்பதற்கான வரையறையற்ற மீள்நிதியிடல் திட்டங்கள் குறைக்கப்பட்ட வட்டி வீதங்களுடன் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தன. தேவையேற்படின் திட்டத்தினை விரிவுபடுத்தக்கூடியவகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் மரபல்லா ஏற்றுமதிகளுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் தொகையில் குறைப்பொன்று காணப்பட்டது. வர்த்தக வங்கிகளின் வட்டி வீதங்களிலேற்பட்ட குறைப்புக்கள் திருப்திகரமான ஏற்றுமதிச் செயலாற்றத்தின் காரணமாகச் சிறந்த திரவத்தன்மை நிலைமைகளுடன் இணைந்து, தனியார்துறையின் மீள் நிதியிடல் பயன்பாட்டில் குறைப்பினையேற்படுத்தியது.

தெரிவுசெய்யப்பட்ட கொடுகடன் கட்டுப்பாட்டு வழிமுறைகள், இன்றியமையாததல்லாத இறக்குமதிகள் குறிப்பாக நுகர்வு விடயங்களுக்கான கொடுகடன் விரிவினைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டன. மேலும் வர்த்தக வங்கிகள் மீது விதிக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடுகளைக் குறைநிரப்பீடு செய்வதற்காகவும், வைப்பாளர்களின் நலனைப் பேணுவதற்காகவும் நிதிக்கூட்டு நிலையங்களுக்குப் பொருந்தக்கூடிய திரவத்தன்மை விகிதம் மொத்த வைப்புக்களின் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

உள்நாட்டுத் திரவத்தன்மையின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி இரு குறிப்பிட்ட முறைகளை நாடியது. 1984 யூனிலிருந்து மத்திய வங்கி தனது சொந்தப் பிணைகளை வழங்கியதன்மூலம் வங்கி மூலங்கள் வங்கியல்லா மூலங்களிலிருந்து ரூ. 5,570 இலட்சங் கொண்ட தொகை இவற்றினூடாக ஈர்க்கப்பட்டது. இவ்வழிமுறை படிப்படியான அளவுத்திட்டத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட சிறிதளவான ஒதுக்குத் தேவையின் அறிமுகத்தினால் மேலும் உதவப்பட்டதன்மூலம் வர்த்தக வங்கிகளின் கொடுகடன் வழங்கும் இயலளவினைக் கட்டுப்படுத்தியது.

நாணயத்துறையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க சாதனையானது பணத்தின் சுற்றோட்ட வீதத்திலேற்பட்ட குறைப்பினால் மேலும் வலுப்பெற்றது. வங்கித் தொழில் துறையிலிருந்து அரசு பெற்ற கடன்பாடுகளின் குறைப்பினூடாகக் குறிப்பாக நாணயக் கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசினால் வழங்கப்பட்ட இறை உதவிகள், பணவீக்க வீதத்தைக் குறைப்பதில் பெரும் பங்கெடுத்தன.

மத்திய வங்கியின் வட்டிவீதக் கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்கள் தேசிய சேமிப்பு வங்கியின் வட்டிவீதக் கொள்கையில் மேலாண்மையாளர் தலையிடாமை, வர்த்தக வங்கிகளில் காணப்பட்ட மேலதிக திரவத் தன்மை நிலைமை என்பன காரணமாக வட்டிவீத அமைப்பு இவ்வாண்டில் பல மாற்றங்களுக்குட்பட்டது. தேசிய சேமிப்பு வங்கி தனது ஒரு ஆண்டுக்கான நிலையான வைப்பு வீதத்தை 1984 யூலையில் 2 சதவீதப் புள்ளிகளால் குறைத்தது. வர்த்தக வங்கிகளும் தமது வைப்பு வீதங்களைப் பல அளவுகளில் வேறுபட்ட நேரங்களில் குறைத்தன. பொதுவாகக் குறிப்பிட்ட சில வங்கிகளால் தனிப்பட்ட விடயங்களில் ஏற்படுத்தப்பட்ட சிறு சீராக்கங்கள் தவிர வழங்கல் வீதங்கள் மாற்றமின்றியிருந்தன. பணவீக்க வீதத்திலும், பணவீக்க அமுக்கத்திலுமேற்பட்ட குறைப்புக்களின் விளைவாக வைப்பாளர்களுக்கான வருவாயின் நேர்க்கணிய உண்மை வீதத்திலேற்பட்ட முன்னேற்றத்தினைத் தொடர்ந்து வட்டிவீத அமைப்பு நெகிழ்ச்சித் தன்மையுடையதாயிருக்க வேண்டும்.

கடந்தகால ஆண்டறிக்கைகள் கிராமியத்துறைக்கு வழங்கப்பட்ட கடன் போதாதிருந்தமைபற்றி மத்திய வங்கியின் நிலையை எடுத்தியம்பியுள்ளது. பயன்படுத்தப்படும் சதவீத நியதிகள் கிராமியக் கொடுகடன் திட்டங்களின்கீழ் உண்மையான உள்ளடக்கத்தை எப்போதும் வெளிக்காட்டாமலேயிருந்தன. அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் நெல்லுக்கும், ஏனைய உணவுப் பயிர்ச் செய்கைக்கும் வழங்கப்பட்ட கடன்கள் 1984 இல் ரூ. 2,170 இலட்சத்துக்கு வகை கூறி 1983 ஐ விட ரூ. 360 இலட்சம் அல்லது 20 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தன. தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் விரிவுக்கெதிராக இவ்வதிகரிப்பு நோக்கப்படின் இது மிகவும் சிறியதாகும். இத்தொழிற்பாட்டு மட்டங்களுடன் வங்கித் தொழில்முறை, கிராமிய வேளாண்மைத் துறையின் மொத்தக் கொடுகடன் தேவைகளில் தாக்கமெதனையும் ஏற்படுத்தாது. நாட்டில் கிராமியக் கொடுகடனை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் பயிர்ச்செய்கைக் கடன்களின் மீதே நீண்ட காலத்துக்கு மேற்கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். பயிர்ச்செய்கையல்லாத நடவடிக்கைகளின் பரந்த துறை ஒன்றும் அபிவிருத்திக்காக வங்கி நிதியினை வேண்டி நிற்கிறது.

பணச் சந்தையில் மேலதிகத் திரவத்தன்மை காணப்பட்ட நிலையிலும், மூலதனச் சந்தையில் கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பிடத்தக்கதாய் அமைய வில்லை. இது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சாதனங்கள் கிடைப்பதனையும், பணச்சந்தையிலிருந்து மூலதனச் சந்தைக்கு மூலவளங்களை மாற்றுவதற்கான நிறுவன அமைப்பின் குறைபாட்டினையும் எடுத்துக் காட்டுகின்றது.

1983 இல் இறைத் தொழிற்பாடுகளில் அடையப்பெற்ற குறிப்பிடத்தக்க முன்னேற்றம் 1984 இல் மேலும் வலுவாக்கப்பட்டது. வருவாய்ச் சேகரிப்பிலேற் பட்ட கூடியளவு அதிகரிப்பும் அரச செலவினத்தில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி யும் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையைக் கணிசமாகக் குறைத்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புறுத்திப் பார்க்கையில் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை 1983 இல் 18 சதவீதத்திலிருந்து 1984 இல் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வரவுசெலவுத் திட்டச் சேமிப்புக்களின் மெச்சத்தக்கதொரு மட்டம் உள்நாட்டுச் சேமிப்புக்களை உயர்த்தியது. உண்மையில் வரவுசெலவுத் திட்டச் சேமிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீத அளவில் இருந்ததுடன் உள்நாட்டுச் சேமிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஏறத்தாழ அரைப்பங்கிற்கும் வகை கூறியது.

Central Bank of Sri Lanka
22671
10 JUN 2009
LIBRARY & INFORMATION CENTRE
Communications Department

அட்டவணை 1.5

## இறை அளவுகள் 1980 — 1984

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1980 | 1981 | 1982 | 1983* | 1984* |
|---|---|---|---|---|---|
| வருவாய் ... | 14,068 | 16,228 | 17,809 | 25,210 | 37,731 |
| செலவினம் ... | 30,343 | 31,094 | 37,900 | 46,816 | 53,593 |
| முற்பணக் கணக்குகள் உட்பட மீண்டெழும் செலவினம் ... | 16,489 | 17,721 | 19,231 | 25,083 | 31,843 |
| நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை (–)/ மிகை (+) ... | – 2,421 | – 1,493 | – 1,422 | + 127 | + 5,888 |
| மூலதனச் செலவினம் ... | 13,854 | 13,373 | 18,669 | 21,733 | 21,750 |
| மொத்த வரவு செலவுத் திட்டக்குறை ... | 16,275 | 14,866 | 20,091 | 21,606 | 15,862 |
| நிதியிடல் ... | | | | | |
| வெளிநாட்டு ... | 6,735 | 8,208 | 8,794 | 10,950 | 11,226 |
| உள்நாட்டு வங்கியல்லா ... | 2,484 | 2,779 | 7,607 | 10,147 | 6,601 |
| உள்நாட்டு வங்கி ... | 7,126 | 3,917 | 4,006 | 1,203 | – 2,644 |
| காசு நிலுவைப் பயன்பாடு ... | – 72 | – 38 | – 315 | – 694 | 679 |

## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

| விடயம் | 1980 | 1981 | 1982 | 1983* | 1984* |
|---|---|---|---|---|---|
| வருவாய் ... | 21.1 | 19.1 | 17.9 | 20.7 | 24.9 |
| செலவினம் ... | 45.6 | 36.6 | 38.0 | 38.5 | 35.4 |
| முற்பணக் கணக்குகள் உட்பட மீண்டெழும் செலவினம் ... | 24.8 | 20.8 | 19.3 | 20.6 | 21.0 |
| நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை (—)/ மிகை (+) .. | – 3.6 | – 1.8 | – 1.4 | + 0.1 | + 3.9 |
| மூல தனச் செலவினம் .. | 20.8 | 15.7 | 18.7 | 17.9 | 14.4 |
| மொத்த வரவு செலவுத் திட்டக்குறை .. | 24.5 | 17.5 | 20.1 | 17.8 | 10.5 |
| நிதியிடல் | | | | | |
| வெளிநாட்டு ... | 10.1 | 9.7 | 8.8 | 9.0 | 7.4 |
| உள்நாட்டு வங்கியல்லா ... | 3.7 | 3.3 | 7.6 | 8.3 | 4.4 |
| உள்நாட்டு வங்கி ... | 10.7 | 4.6 | 4.0 | 1.0 | –1.7 |
| காசு நிலுவைப் பயன்பாடு ... | – 0.1 | ... | – 0.3 | – 0.6 | 0.4 |

* தற்காலிகமானவை.

மூலங்கள்: திறைசேரி.
இலங்கை மத்திய வங்கி.

மொத்த அரசிறை 1984 இல் 50 சதவீதத்தால் அதிகரித்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகப் பார்க்கையில் 21 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இவ்வாண்டுக் காலத்தில் அரசிறைத் திரட்டல் முயற்சிகள் வலுப்படுத்தப்பட்டன. வரியல்லா மூலங்களிலிருந்தான அரசிறை உயர்வடைந்தது. செலவினப் பக்கத்தில், செலவினக் குறைப்புக்கள்மூலம் செலவின வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசதுறைக் கூட்டுத்தாபனங்களின் தொழிற்பாடுகளை முன்னேற்றுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும் குறைநிரப்புக் கடப்பாடுகளிலிருந்தும் தோன்றிய தாக்கங்கள் செலவின குறைப்புக் களினுல் பெறப்பட்ட நன்மைகளைப் பயனற்றதாக்கிவிட்டன. 1983 இன் 24 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் மொத்தச் செலவினம் 14 சதவீதத்தினுல் அதிகரித்தது.

வரவு செலவுத் திட்டப் பற்றுக் குறையை நிதியிடுவதற்கு அரசாங்கம் கணிசமானளவு வெளிநாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தியது. பற்றுக்குறையின் மொத்த வெளிநாட்டு நிதியிடல் 1983 இல் 51 சதவீதத்திலிருந்து 1984 இல் 71 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி நோக்குகையில் வெளிநாட்டு மூலங்களிலிருந்தான மூலவளங்கள் 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அரசாங்கமும் கூட உள்நாட்டு வங்கியல்லா மூலங்களைக் குறைந்த மட்டத்திலேயே நாடியிருக்கிறது. இந்நிதியிடல் முயற்சிகள் 1977 ஆம் ஆண்டிலிருந்தும் முதற்தடவையாக மூலவள இடைவெளியை விஞ்சுகின்ற வகையில் மூலவளங்களைத் திரட்டின. இம்மிகை யானது வங்கித் தொழில் முறைக்கான படுகடனின் ஒரு பகுதியை மீளச் செலுத் தப் பயன்படுத்தப்பட்டது.

1984 இல் முன்னேற்றமடைந்த பன்னுட்டு பொருளாதாரச் சூழ்நிலை பல எண்ணெய் அல்லா அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு நன்மைபயத்தது. ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட வலுவான பொருளாதார மீட்சி உலகளாவிய முறையில் உற்பத்தியைக் கூடியளவில் உயர்த்தியது. எனினும் உலகின் மீட்சி சமநிலையற்றதாகவே இன்னமும் காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்கா தவிர்ந்த முன்னேற்றமடைந்த கைத்தொழில் நாடுகளிடையே யப்பானும் கனடாவும் மாத் திரமே வளர்ச்சியில் மிதமான உயர்ந்த வீதங்களைப் பதிவு செய்தன. பெரும் பாலான ஐரோப்பிய பொருளாதாரங்கள் கட்டுப்பாடான இறைக் கொள்கை களினுலும் கட்டுப்பாடற்ற தொழிலாளர்கள் சந்தைகளாலும் பாதிக்கப்பட்டிருக் கின்றன. இந்நாடுகளின் நாணயக் கொள்கைகள் ஐக்கிய அமெரிக்காவிற்கான மூலதன வெளிப்பாய்ச்சல்களிலிருந்து தோன்றிய கடுமையான தாக்கத்திற்குட் பட்டுள்ளன. ஆண்டின் மூன்ரும் காலாண்டுப் பகுதியில் ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீதத்தில் சிறியதொரு கீழ்நோக்கிய அசைவு அவதானிக்கப்பட்டது. ஆண்டின் நடுப்பகுதியில் மசகெண்ணெய் விலைகள் உறுதியாக இருந்தபோதும் அவை மேலும் கீழ்நோக்கிய தாக்கத்தை எதிர்நோக்கின. ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் எண்ணெய் அல்லாத பண்டங்களின் விலைகள் ஆண்டின் தொடக்கத்தில் உச்ச மட்டத்தையடைந்த பின்னர் ஆண்டின் மூன்ரும் காலாண் டுப் பகுதியில் ஓரளவிற்குச் சரியத் தொடங்கின. பெரும்பாலான கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட நாடுகளில் பணவீக்கம் வீழ்ச்சியடைந்து சராசரியாக ஏறத் தாழ 5 சதவீதமாக இருந்தது. எனினும் உயர்ந்த தொழிலின்மையை விலையாகக் கொடுத்தே குறைந்த பணவீக்கத்தை அடைய முடிந்தது. கைத்தொழில் மயப் படுத்தப்பட்ட நாடுகளில் அதிகரித்துச் செல்லும் தொழிலின்மைக்கான வலுமிக்க பாதுகாப்புக்கள் உலக வர்த்தகத்தின் விரிவிற்குத் தடையாக விளங்குகின்றன.

அவ்வாறிருந்துங்கூட 1984 இல் உலக வர்த்தத்தின் வலுவான மீட்சி பெரும் பாலான அபிவிருத்தியடைந்த நாடுகள் அவற்றின் பொதுவான சென்மதி நிலுவை நிலைமையை முன்னேற்றுவதற்கு உதவியது.

இலங்கையும்கூட இப்பன்னாட்டுப் பொருளாதார அபிவிருத்தியிலிருந்தும் நன்மையடைந்தது. உறுதியான பண்ட விலைகள், பல முக்கிய இறக்குமதி விடயங்களின் விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி என்பன இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் முன்னைய ஆண்டின் 16 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து மேலும் 14 சதவீதத்தினால் முன்னேற்றமடைவதற்கு உதவியது. உண்மைத் தேசிய வருமானத்தில் 7.6 சதவீதம் கொண்ட மேலுமொரு அதிகரிப்பை விளைவித்தது. (வர்த்தக மாற்றுவிகித மாற்றங்களின் பொருட்டு உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தி சீராக்கப்பட்டது).

1984 இல் இலங்கையின் சென்மதி நிலுவைச் செயலாற்றம் மிகவும் சாதகமாக விளங்கியது. இது முக்கியமாக முன்னேற்றமடைந்த வணிக வர்த்தகச் செயலாற்றத்தைப் பிரதிபலிக்கின்றது. சென்மதி நிலுவையின்மீது ஏற்பட்ட முக்கிய தாக்கம் சிஎஉ நியதிகளில் 83 சதவீதத்தால் அதிகரித்த தேயிலை ஏற்றுமதிகளிலிருந்து ஏற்பட்டதுடன் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியில் 42 சதவீதத்திற்கும் வகை கூறியது. தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றிலிருந்தான இணைந்த வருவாய்கள் சிஎஉ 2,910 இலட்சங்களாக அமைந்தன. எனினும் சென்மதி நிலுவையின் அடிப்படைப் பலவீனம் தொடர்ந்தும் காணப்பட்டது. இறப்பர் தெங்கு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் உற்பத்தியில் ஏற்பட்ட பின்னடைவின் காரணமாக உயர்ந்த விலைகளின் முழு நன்மைகளையும் இலங்கையினால் பெற முடியவில்லை. இறப்பர் ஏற்றுமதிகள் 0.8 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்த வேளையில் தெங்கு ஏற்றுமதிக்குச் சமனான காய்கள் 44 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இன்னொரு உறுதியற்ற குழப்பத்தன்மை யாதெனில் சிறு வேளாண்மைப் பயிர்களின் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருவதாகும். இத்துணைத்துறையை மீண்டும் ஆற்றல் மிக்கதாக்குவதற்கு தாக்கம்மிக்க வழிமுறைகளை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. இதே கருத்தினைக் கடந்த சில ஆண்டுகளாக எச்சரிக்கத்தக்க வீழ்ச்சியைக் காட்டும் இரத்தினக்கல் ஏற்றுமதிக்கும் குறிப்பிடலாம். புடவைகள், தைக்கப்பட்ட ஆடைகள், ஏனைய கைத்தொழில் ஆகியவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பே வர்த்தகச் செயலாற்றத்தில் மிக்க ஊக்கம் தரும் பண்பாக விளங்கியது.

1983 ஆம் ஆண்டில் சிஎஉ நியதிகளில் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவினம் 1984 இல் 1.7 சதவீதம் கொண்ட மேலுமொரு அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதனால் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் இறக்குமதி வளர்ச்சி மிகச் சிறிதளவாக இருந்தது. எண்ணெயினதும் சீனியினதும் குறைந்த விலைகள், அரிசியில் கிட்டத்தட்டத் தன்னிறைவடைந்து கொண்டமை ஆகியன இறக்குமதிச் செலவின் குறைந்த வளர்ச்சிக்குப் பொறுப்பாக அமைந்தன. 1983 இல் 21 சதவீதமாக விளங்கிய உதவியுடன் தொடர்பான இறக்குமதிகளின் பங்கு 1984 இல் 22 சதவீதத்திற்கு அதிகரித்தது. பன்னாட்டு உதவி குறைவடைந்து செல்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதனால் உதவி தொடர்பான இறக்குமதிகளை முன்னைய அதன் மட்டங்களிலேயே பேணுவதற்கு இலங்கையினால் முடியாமல் போகலாம். ஆகவே இறக்குமதிப் பதிலீடுகளையும் அதேபோன்று ஏற்றுமதி வருவாய்களையும் அதிகரிப்பதற்கான வழிமுறைகளின் முக்கியத்துவம் மிக உயர்ந்த முன்னுரிமையைப் பெற வேண்டும்.

அட்டவணை 1.6

## சென்மதி நிலுவையின் சுருக்கம் 1982—1984

ரூபா பத்து இலட்சங்களில் (அடைப்புக்குள் சி. எ. உ. பத்து இலட்சங்களில்)

| | 1982(அ) | 1983(அ) | 1984(ஆ) |
|---|---|---|---|
| வணிக ஏற்றுமதிகள் ... ... | 21,098 (918) | 25,038 (993) | 37,453 (1,439) |
| வணிக இறக்குமதிகள் ... ... | 41,501 (1,808) | 45,206 (1,794) | 47,626 (1,825) |
| காரணியல்லாப் பணிகள் (தேறிய) ... ... | 1,645 (72) | 1,803 (73) | 1,798 (68) |
| காரணிப் பணிகள் (தேறிய) ... ... | – 1,959 (–85) | – 3,214 (–129) | – 3,356 (–128) |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) ... ... | 5,494 (240) | 6,441 (256) | 7,039 (270) |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) ... ... | 3,379 (147) | 4,016 (160) | 3,903 (150) |
| நடைமுறைக் கணக்கு நிலுவை ... ... | – 11,844 (–516) | – 11,122 (–441) | – 789 (–26) |
| மொத்த நிலுவை ... ... | – 1,009 (–18) | + 342 (+0.6) | 7,062 (+297) |

### சில முக்கிய குறிகாட்டிகள்

| | 1982 | 1983 | 1984 |
|---|---|---|---|
| வர்த்தக மாற்றுவீதம் (1978=100) ... | 38 | 44 | 50 |
| தேறிய பெற்றோலிய இறக்குமதி ... | 8,994 (391) | 8,342 (332) | 7,393 (284) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குக்குறை ... | 11.8 | 9.1 | 0.5 |
| மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் ... | 11,234 (478) | 13,026 (499) | 18,942 (735) |
| மொத்த பன்னாட்டு ஒதுக்குகளின் இறக்குமதி இயலளவு (மாதங்களிலான இறக்குமதிகள்) (இ) ... | 3.2 | 3.2 | 4.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) சிஎஉ நியதிகளில் தொடர்ந்துவரும் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட இறக்குமதிகள்.

சென்மதி நிலுவையின் வணிகக் கணக்கின் மீதான பற்றுக்குறை முன்னைய ஆண்டின் ரூ. 201,680 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 8,010 இலட்சம்) ரூ. 101,730 இலட்சங்களுக்கு (சிஎஉ 3,860 இலட்சம்) கடுமையாக வீழ்ச்சியடைந்தது. இது 50 சதவீதத்திற்கும் கூடுதலான கணிசமானதொரு வீழ்ச்சியாகும். பணிகள் கணக்கின் பற்றுக்குறை 1983 இனைவிடச் சிறியதொரு வீழ்ச்சியினையே காட்டியது. இப்பற்றுக்குறை முக்கியமாக வெளிநாட்டுக் கடன்கள் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவு அதே போன்று சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட சிறிதளவு (சிஎஉ நியதிகளில்) வீழ்ச்சி ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டது. எனினும் 1984 இல் வெளிநாட்டுச் சொத்துக்கள் படிப்படியாகக் கட்டியெழுப்பப்பட்டதன் காரணமாக இக்காரணிகளின் எதிர்க்கணியத் தாக்கம் உயர்ந்த வட்டிப் பெறுகைகளினால் பெருமளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது.

1984 இல் நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டியது. உதவியாகக் கிடைக்கும் நன்கொடைப் பெறுகைகளும் வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களின் வெளிநாட்டுப் பண அனுப்பல்களும், பொருட்கள், பணிகள் மீதான பற்றுக்குறையை ஒழிக்க ஏறக்குறையப் போதுமானதாக இருந்தமையின் விளைவாக நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை சிஎஉ 260 இலட்சமாக மாத்திரமே காணப்பட்டது. அலுவல்சார் மாற்றல்கள் முன்னைய

ஆண்டினைவிட ஓரளவு குறைவாக இருந்த வேளேயில் தனியார் மாற்றல்கள் (முக்கியமாகத் தொழில் பார்ப்போரின் பணவனுப்பல்கள்) 5 சதவீதத்தினுல் அதிகரித்தன. குறைந்த எண்ணெய் விலேகளும் அதன் விளேவாக மத்திய கிழக்கிற் கான செலவினம் குறைக்கப்பட்டமையும் தொழில் பார்ப்போரின் பணவனுப்பல் வளர்ச்சியைப் பேணுவதன் வாய்ப்பை மிகக் குறைவாக்கும் எனத் தோன்று கின்றது. இதனுல் சென்மதி நிலுவையின் இடைக்கால முன்னேற்றம் வணிக வர்த்தகக் கணக்கின் மிகச் சாதகமான நிலுவையிலிருந்தே தோன்றவேண்டி யிருக்கின்றது.

நடைமுறைக் கணக்கின் பற்ருக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.1 சதவீதத்திலிருந்து 1984 இன் 0.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ரூ. 39,030 இலட்சம் (சிஎஉ 1,500 இலட்சம்) கொண்ட அலுவல்சார் மாற்றல் களேத் தவிர்க்கும்பொழுது இவ்விகிதம் கடந்த ஆண்டின் 12.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.1 சதவீதமாக இருக்கின்றது. குறிப்பாக மகாவலி தொடர்பான உதவிகள் குறைவடைந்து செல்லும்பொழுது வெளிநாட்டு உதவிப் பாய்ச்சல்கள் கீழ் மட்டத்தை அடையும் எனவும் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவு கள் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுவதனுல் இச் சென்மதி நிலுவை நிலேயை பேணுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படல் அவசியமாகும்.

பணிகள், கணக்குகளின் பற்ருக்குறையில் ஏறத்தாழ 95 சதவீதம் தனியார், அலுவல்சார் இரண்டினதும் மாற்றல்கள் காரணமாக ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய உட்பாய்ச்சலினுல் ஈடுசெய்யப்பட்டது. நடைமுறைக் கணக்கின் மிகச் சிறிய பற்ருக்குறை நாணயமல்லா மூலதனங்களின் பெருமளவு உட்பாய்ச்சல்கள் மூலம் நிதியிடப்பட வேண்டியிருந்தது. எனினும் நாணயமல்லா மூலதனத்தின் உண்மையான உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்கின் பற்ருக் குறையினே வெகுவாக விஞ்சின. இதன் விளேவு பொதுவான உயர்ந்த மிகை யாகும். 1984 இன் முழுமையான மிகை 1983 இன் சிஎஉ 6 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் சிஎஉ 2,970 இலட்சமாகக் காணப்பட்டது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 47 சதவீதத்தினுல் அதிகரித்து ஆண்டின் இறுதியில் ரூ. 189,420 இலட்சங்களே (சிஎஉ 7,350 இலட்சம்) அடைந்தது. இது 1985 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட நாலரை மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது.

அண்மைய ஆண்டுகளில் வெளிநாட்டுக் கடன்பாட்டில் ஏற்பட்ட வளர்ச்சி சென்மதி நிலுவையின் முகாமை மற்றும் செலாவணி வீதம் ஆகியவற்றின் பொருட்டான இதன் விளேவுகளால் மிகக் கவனத்திற்குரியதொரு விடயமாக இருக்கின்றது. கடன்பாட்டு முகாமை, சென்மதி நிலுவையின் அடிப்படைப் போக்கு பொருளாதார வளர்ச்சிக்கான நீண்டகால வாய்ப்பு ஆகியவற்றினைக் கருத்திற் கொண்டு நோக்கப்பட வேண்டும். ஆகவே வர்த்தகக் கடன்பாடுகளே ஊக்கமிழக்கச் செய்தல், இறக்குமதிப் பதிலீட்டினே வலியுறுத்தல், ஏற்றுமதியை ஊக்குவித்தல் ஆகியன தொடர்பான தற்போதைய கொள்கை முனைப்புக்கள் சரியான நோக்கில் எடுக்கப்பட்டுள்ளன.

1984 இல் படுகடனின் அமைப்பில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதொரு மாற்றம் யாதெனில் குறுங்காலக் கடன்களில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சி யாகும். இது வெளிநாடுகளிலிருந்தான மத்திய வங்கியின் கடன்பாடுகள் 1983 இன் சிஎஉ 720 இலட்சங்களிலிருந்து 1984 இல் சிஎஉ 5 இலட்சத்திற்கு வீழ்ச்சி யடைந்தமையினுல் தோன்றியதாகும். படுகடன் அமைப்பினே முன்னேற்றிய

இன்னுமொரு காரணி வர்த்தகக் கொடுகடனின் உயர்ந்த வட்டிச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். கடன்பாட்டின் அமைப்பில் ஏற்பட்ட மாற்றமும், முன்னேற்றமடைந்த ஏற்றுமதிச் செயலாற்றமும் ஏற்றுமதிகளுக்கான படுகடன் பணிக் கொடுப்பனவு விகிதம் 1983 இன் 22 சதவீதத்திலிருந்து 1984 இல் 17 சதவீதத்திற்குக் குறைவதற்குக் காரணமாயிருந்தன.

1984 ஆம் ஆண்டில் வலுத்துறையில் மெச்சத்தக்க முன்னேற்றமொன்று காணப்பட்டது. இம் முன்னேற்றத்தின்மீது செல்வாக்கைக் கொண்டிருந்த முக்கிய காரணிகளாக உலக எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, மின்வலுவின் நிறுவப்பட்ட இயலளவில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பு, நீர்மின்வலு உருவாக்கத் திற்குச் சாதகமான வானிலை நிலைமைகள் என்பன விளங்கின. இவ்வாண்டில் நீர்மின்வலு வழங்கல் முன்னேற்றமடைந்ததன் காரணமாக மின்வலு உருவாக்கத் தில் பெற்றோலியத்தின் பயன்பாடு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. இது சென்மதி நிலுவையில் பெரும் தாக்கத்தைக் கொண்டிருந்த தேறிய பெற்றோலிய இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியை ஏற்படுத்தியது. அவ்வாறிருந் தாலும்கூட இச்சாதகமான அபிவிருத்திகள் பொருத்தமான கேள்வி முகாமை மற்றும் வலுப் பங்கீட்டில் திருந்திய செயற்பாடு ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்ட கொள்கை முயற்சிகளைப் பலவீனப்படுத்தக்கூடாது.

மொத்தத்தில் 1984 இன் பொருளாதாரச் செயலாற்றம் உற்சாகமளிப்ப தாகவே இருக்கின்றது. பல துறைகளில் அடையப்பட்ட முன்னேற்றங்கள் எதிர் பார்ப்புக்களை விஞ்சியுள்ளன. இவ்வாண்டுக் காலத்தின் அபிவிருத்திகள் பொரு ளாதாரத்தின் அடிப்படைப் பலவீனங்களை மீண்டும் எடுத்துக் காட்டின. உயர்ந்த பொருளாதார வளர்ச்சி நீண்டகால வரட்சி மற்றும் 1983 இன் பின்னடைவு களிலிருந்தும் மீட்சியடைந்தமையையும் முன்னேற்றமடைந்த வர்த்தக மாற்று விகிதத்தின் வருவாய்த் தாக்கத்தையும் பிரதிபலித்தது. வேளாண்மைத் துறையின் ஒரு தனித்துணைத்துறை (தேயிலை) பொருளாதாரத்தின் மேம்பாட்டிற்குப் பெரு மளவிற்குப் பொறுப்பாயிருந்தது. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை 1983 ஆம் ஆண்டிலும் பார்க்கக் கணிசமானளவு குறைவாக இருந்தபோதும் வணிகக் கணக்கின் மீதான பற்றுக்குறையின் உயர்ந்த மட்டம் காரணமாக இன்னமும் பெருமளவு தாக்கம் மிக்கதாகவே காணப்படுகின்றது. அடிப்படைப் பலவீனங்களின் காரணமாக 1984 இல் அவதானிக்கப்பட்ட உறுதி யான முன்னேற்றமடைந்த சென்மதி நிலுவை நிலைமை தொடர்ச்சியாக இருக்க முடியாது போகலாம்.

பன்னாட்டு பொருளாதார சூழ்நிலையில் ஏற்பட்ட அண்மைய அபிவிருத்திகள் உலக வர்த்தகத்தில் காணப்பட்ட வேகம் நிலையானதாக இருக்காது என்பதனை எடுத்துக் காட்டின. பண்டவிலை அமைப்பு எண்ணெய் அல்லாப் பண்டங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வர்த்தக மாற்று விகிதம் வரும் ஆண்டுகளில் மோசமாக இருக்கலாம் என்பதனை உணர்த்துகின்றது. கைத்தொழில் மயப் படுத்தப்பட்ட நாடுகளின் பாதுகாப்பின் பொருட்டான பெருமளவு வற்புறுத்தல் குறைந்தளவு அபிவிருத்தியடைந்த நாடுகளின் தயாரிக்கப்பட்ட பொருட்களின் சந்தைப்படுத்தல் சிக்கல்களை மேலும் உருவாக்கும். பன்னாட்டுப் படுகடன் நெருக் கடிகள் தோன்றியதன் காரணமாக வெளிநாட்டுதவி மற்றும் கடன்களின் கிடைப் பனவு கடந்த காலங்களினைவிடக் குறைவடையலாம் போல் இருக்கின்றது. இக் கருத்தில் பார்க்கையில் அண்மைய பொருளாதார முன்னேற்றங்களை உறுதிப் படுத்துவதிலும் தற்போதைய வளர்ச்சியைவிட உயர்ந்த வீதத்தில் பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்துவதிலும் இலங்கை கடுமையான பணியினை எதிர்நோக்க

வேண்டியிருக்கின்றது. ஆகவே ஏற்றுமதியை ஊக்குவித்தலிலும் இறக்குமதிப் பதிலீடுகளிலும் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்வது தொடர்ச்சியாகத் தேவைப்படுகின்றது. வேளாண்மை மற்றும் கைத்தொழில்களைக் கொண்ட முதன்மைத்துறைகளில் ஏற்பட்ட அமைப்பு மாற்றங்கள் நடுத்தர காலத்தில் விரும்பத்தக்க வளர்ச்சி நோக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. வரவுசெலவுத் திட்ட மறுசீரமைப்பு கேள்வி முகாமை ஆகிய இரண்டுடனும் தொடர்புபட்ட ஒன்றுக்கொன்று உதவும் நாணய–இறைக் கொள்கைக்கான அவசியம் வலியுறுத்தப்பட வேண்டும்.

வேளாண்மைத் துறையில் வளர்ச்சிக்கும் பன்முகப்படுத்தலுக்குமான குறிப்பிடத்தக்க உள்ளார்ந்த வளம் காணப்படுகின்றது. சரியான உருவாக்கம் கொள்கைகளின் சிறப்பான நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றின்மூலம் இவ்வுள்ளார்ந்த வளத்தினை தாக்கம்மிக்க விதத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியும். மரப்பயிர்த்துறையை மீள் ஆற்றல் மிக்கதாக்குவதில் அரசிற்குள்ள ஆர்வம் அரசுடைமையாக்கப்பட்ட பெருந்தோட்டங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட நடுத்தர கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் அதன் கடப்பாட்டில் நன்கு பிரதிபலிக்கப்பட்டது. மூன்று முக்கிய மரப்பயிர்களுக்குமான சமநிலைப்படுத்தும் நிதியை நிறுவுவதற்கான அரசின் எடுத்துரைப்புக்கள் சரியான நோக்கில் எடுக்கப்பட்டதொரு நடவடிக்கையாகும்.

மரப்பயிர்த்துணைத்துறையிலும் உள்ளார்ந்த வள விளைவிற்கும் உண்மையில் அடையப்பட்ட முன்னேற்றங்களுக்குமிடையிலான இடைவெளிகள் கணிசமாகத் தொடர்ந்தும் இருந்ததுடன் இது இன்றியமையாத கவனத்திற்குமுரிய தொன்ருக இருக்கின்றது. மரப்பயிர்த்துணைத் துறையின் நீண்டகால ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கு இவ்விளைவு வேறுபாடுகளைக் குறைப்பது இன்றியமையாததாக இருக்கின்றது. தற்போதைய பொருளாதார முறையின் ஆற்றல் உயர்ந்தளவு ஏற்றுமதி சார்ந்த துணைத்துறைகளின் செயலாற்றத்தில் பெருமளவிற்குத் தங்கியிருப்பதனல் அரசுடைமையாக்கப்பட்ட மற்றும் தனியார் பெருந்தோட்டங்கள் இரண்டிலும் உற்பத்தி சார்ந்த முன்னேற்றம் வலியுறுத்தப்படல் வேண்டும். ஏற்றுமதியின் போட்டியிடும் ஆற்றலை உயர்த்துவதற்குத் தேயிலைப் பெருந்தோட்டங்களின் புத்தாக்கமும், முகாமைத்துவ முன்னேற்றமும் இன்றியமையாதனவாகும். இலங்கை மரபுரீதியான தேயிலையின் முதன்மை உற்பத்தியாளராகத் தொடர்ந்தும் விளங்குகின்றது. தேயிலை ஏற்றுமதி செய்யும் ஏனைய நாடுகள் வெட்டி, கிழித்து, சுருட்டப்பட்ட மற்றும் மரபுரீதியான தேயிலை இரண்டையும் கலந்த உற்பத்திகளிலிருந்து நன்மையடைந்தன. சில குறிப்பிட்ட பிரதேசங்களின் குறிப்பாக மத்தியநிலத் தேயிலை உற்பத்தி வெட்டி, கிழித்து, சுருட்டப்பட்ட தேயிலைக்கு மாறியமை பயன்மிக்கதொன்றெனக் கருதலாம். இது உலக தேயிலைச் சந்தையில் இலங்கையின் போட்டியிடும் ஆற்றலை முன்னேற்றும். உயர்ந்தளவு சந்தை ஊறுபாடுகளைக் கொண்டிருக்கும் மத்திய நில வளர் தேயிலையை வெட்டி, கிழித்து, சுருட்டும் தேயிலைக்கு மாற்றுதல் அத்தகைய பிரதேசங்களிலுள்ள பெருந்தோட்டங்களின் ஆற்றலை அதிகரிக்கக்கூடும். உற்பத்தி வகையில் ஏற்படும் மாற்றம் எதிர்காலத்தில் விலைகளில் ஏற்படும் வீழ்ச்சிகளுக்கெதிராகச் சில பாதுகாப்புக்களை வழங்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கூட்டப்பட்ட பெறுமதியில் உயர்ந்த அளவினைத் தெங்குத் துணைத்துறை கொண்டிருப்பதனை நோக்கும்பொழுது இத்துறை மிக நெருங்கிய கவனத்திற்குரிய ஒன்ருக விளங்குகின்றது. உற்பத்தியாளர் இலாபங்கள் தொடர்ந்தும் பயனற்றனவாகவே விளங்குகின்றன. மேலாண்மையாளர்களின் தலையீடு காரணமாகச் சந்தை நிறைபோட்டியற்ற தன்மைக்குட்பட்டுள்ளது. இதனைத் தவிர்த்துக் கைத்தொழில் அபிவிருத்திக்கான முயற்சிகளில் அதிகளவு கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும்.

நெல் உற்பத்தியில் அடையப்பட்ட பெரும் முன்னேற்றம் தற்போதைய நுகர்வு மட்டங்களிலும் தொடர்பான விலைகளிலும் அரிசியில் நாட்டைத் தன்னிறைவின் விளிம்புக்குக் கொண்டு வந்தது. எனினும் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமைக்கு அரிசியைப் பதிலீடு செய்தல் என்ற கருத்திற் பார்க்கையில் இறக்குமதிப் பதிலீட்டிற்கான நெல்லின் உள்ளார்ந்த வளம் இன்னமும் காணப்படுவது கவனிக்கத்தக்கதாக உள்ளது. உள்நாட்டு நெல் உற்பத்தியின் முழு நன்மையும் சரியான விலையிடல் கொள்கைகளை வடிவமைத்தல், கோதுமை மாவின் நுகர்விற்குப் பதிலாக அரிசி நுகர்வைத் தூண்டுவதற்குப் பதப்படுத்தலில் முதலீடுகளை மேற்கொள்ள ஊக்கமளித்தல் ஆகியவற்றின்மூலம் அடையப்பட வேண்டும். நெல் உற்பத்தியில் தற்போது அதிகரித்துச் செல்லும் போக்கின் உதவியுடன் தேசிய தாங்கிருப்புத் தேவைகள் உள்நாட்டு நிலங்களிலிருந்தும் ஈடுசெய்யப்படல் வேண்டும்.

நெற் சந்தைப்படுத்தும் சபைக்கும், உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கும் இடையில் இணைந்த சந்தைப்படுத்தல் நிலவவேண்டியதன் அவசியத்தைக் கடந்த பல ஆண்டறிக்கைகள் எடுத்துக் காட்டியுள்ளன. நிருவாகக் காரணங்களினல் மாத்திரம் நாட்டின் நெல்—அரிசி சந்தைப்படுத்தலின் ஒழுங்குபடுத்தலின் உண்மைத் தன்மையை மூடி மறைக்கக் கூடாது. மீள்நிதியிடல் வசதிகளில் தங்கியிருத்தலைக் குறைத்தல் மற்றும் நெற்சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு வர்த்தகக் கொடுகடனுக்கு மாறுதல் ஆகிய விடயங்கள் விரைவான கவனத்தை வேண்டி நிற்கின்றன. தற்போதைய உற்பத்தி மட்டத்திலும் அரிசிக்கான தாக்கம் மிக்க திறந்த சந்தையிலும் நெற் சந்தைப்படுத்தும் சபை அதன் சந்தைத் தீர்மானங்களைக் கட்டுப்பாடற்ற முறையில் மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

அதிகரித்த நெல் உற்பத்தியுடன் தோன்றியிருக்கும் இன்னெரு விடயம் யாதெனில் ஈர வலயத்தின் எல்லை நிலங்களிலும் வரண்ட வலயத்தில் மழையினலும், சிறு நீர்ப்பாசனத்தின் மூலமும் நீர் பெறும் நிலங்களிலும் நெற்செய்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருவதாகும். இத்தகைய நிலம் மண், மற்றும் குறிப்பிட்ட பிரதேசங்களின் நிலப்பயன்பாட்டில் புதிய அணுகுமுறையுடன் தொடர்புடையதாக இருக்கும் பயிர்ச்செய்கைத் தன்மை ஆகியன பற்றிக் கவனமாக ஆராய்ந்த பின்னர் கூடியளவிற்குப் பொருளியல் நன்மை பயக்கும் பயிர்களுக்கு மாற்றப்படலாம். இவ்விடயம் நிறுவப்படவிருக்கும் காணி ஆணைக் குழுவின் கவனத்தைப் பெறவேண்டும். விரைவுபடுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான முதன்மை வேலைத்திட்டங்கள் நிறைவு பெறுவதுடன் நிகழ்ச்சித் திட்டங்களின் பொருளாதார நன்மைகள் நியாயமான காலப்பகுதிக்குள் அடையப்பட வேண்டுமாயின் விரைவான கீழ் நீரோட்டப் பிரதேச அபிவிருத்திகள் தொடர்ந்தும் முன்னுரிமைக் கவனத்தைப் பெறவேண்டும் இது மகாவலியின் கீழ் நீரோட்ட நீர்ப்பாசன முறைகளில் உள்ளார்ந்த அமைப்பு, வீடமைப்பு மற்றும் பணி வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த முயற்சியை வேண்டி நிற்கின்றது.

சிறு உணவுப் பயிர்கள் துறையில் நாடு இன்னமும் பெருமளவு நன்மைகளைப் பெறவில்லை. முன்னைய ஆண்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டவாறு நெற்றுணைத் துறைக்கு வழங்கப்பட்ட விலையிடல் கொள்கைகளும், ஏனைய ஊக்குவிப்புக்களும் இப் பயிர்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட வேண்டும். இறக்குமதிப் பதிலீடுகளுக்கான கவர்ச்சிமிக்க சந்தர்ப்பங்களுடன் இணைந்த ஏனைய வேளாண்மை நடவடிக்கைகளாக விலங்கு வளர்ப்பு, அபிவிருத்தி, கரும்புப் பயிர்ச்

செய்கையும் பதனிடலும், பருப்பு வகை பயிர்ச்செய்கை, மீன்பிடி அபிவிருத்தி என்பன விளங்குகின்றன. உள்நாட்டுச் சந்தைத் தேவைகளை ஈடுசெய்வதற்காகவும் குடித்தொகையின் ஊட்டச் சத்துத் தரத்தை உயர்த்துவதற்காகவும் அரசாங்கம் இத்துறைகளைச் செறிந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்கனவே பொறுப்பேற்றுள்ளது. தேசிய வேளாண்மை உணவு ஊட்டச்சத்து வழிவகையின் உருவாக்கம் அதிகரிக்கின்ற ஏற்றுமதி இயலளவிற் கான உணவுப் பயிர்கள், விலங்கு வளர்ப்பு, மீன்பிடித் துணைத்துறைகள், தொழில் உருவாக்கல், மக்களின் ஊட்டச்சத்துத் தரத்தை முன்னேற்றல் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காக அரசினால் வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்துகின்றது. எடுத்துரைக்கப்பட்ட இவ்வழிவகையை நடைமுறைப்படுத்து வதறகு ஒருங்கிணைந்ததொரு முயற்சி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

வேளாண்மையில் மட்டும் கவனம் செலுத்துவது எதிர்காலத்தில் பொரு ளாதாரத்தை உறுதியான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லாது. வருமானம், தொழில்வாய்ப்பு, வெளிநாட்டு ஒதுக்குகள் கைத்தொழில் வளர்ச்சிக்கு அடிப்படை யான விரிவாக்கம் ஆகியவற்றை விரிவாக்குவதில் உயர்ந்த வேளாண்மை உற்பத்தி களின் பங்களிப்பினை வரவேற்கின்ற வேளையில் ஏற்றுமதி சார்ந்த வெளிநோக்கிய மரபுவழியற்ற கைத்தொழில்களுக்கூடாகப் பொருளாதார வளர்ச்சியில் உயர்ந்த வீதத்தை அடைவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் வேண்டும். இலங்கையின் சென்மதி நிலுவையில் காணப்படும் அடிப்படைப் பலவீனத்தைத் தீர்ப்பதற்கும் விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்குமான இலங்கையின் இயலாற்றல் இறக்குமதிப் பதிலீடுமூலம் வேளாண்மை அபிவிருத்தி யில் காணப்படும் மிகையான உள்ளார்ந்த வளத்தைப் பாவிப்பதில் மட்டுமன்றி குறிப்பாக ஏற்றுமதி சார்ந்த தயாரிப்புக் கைத்தொழில்கள் அபிவிருத்திகளை நன்கு வடிவமைப்பதிலும் பெரும் அளவிற்குத் தங்கியுள்ளது. கடந்த காலத்தில் இலங்கையின் கைத்தொழில் செயலாற்றம் மந்தமாகக் காணப்பட்டது. கைத் தொழில் முதலீட்டிற்கான ஊக்குவிப்புக்கான வடிவமைப்பு வேலைகள் சாதகமான இறக்குமதிப் பதிலீடுகளைச் சார்ந்தனவாக இருந்தன. எனினும், இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளம் சிறிய உள் நாட்டுச் சந்தையின் காரணமாகப் பெருமளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தனியார் தயாரிப்புக் கைத்தொழில் ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி உபாயங்களில் சிறப்பாகக் கவனம் செலுத்துவதாக இருந்தபோதும் கைத்தொழில் ஏற்றுமதிகள் பரந்தளவில் விரிவடையவில்லை. கடந்த காலத்தில் சுற்றுலா, உண்மைச் சொத்து அபிவிருத்தி, வர்த்தகம், வீதிப் பயணிகள் போக்குவரத்துப் பணிகள் போன்ற கவர்ச்சிமிக்க ஊக்கங்களையும் உயர்ந்த வருமானத்தையும் தரும் துறைகளில் தனியார் முதலீடு பெருமளவிற்குக் குவிந்து காணப்பட்டது.

மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் இறக்குமதிப் பதிலீட்டினை மாற்று வதற்காக ஏற்றுமதி ஊக்குவிப்புக்களை நோக்கி ஒருபக்கச் சார்பான ஊக்குவிப்பு அமைப்பு முயற்சிகள் சில மேற்கொள்ளப்பட்டன. இவ்வழிமுறைகள் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கான பொறித்தொகுதியின் தீர்வையற்ற இறக்குமதி குறிப்பிட்ட தெரிந்தெடுக்கப்பட்ட மரபல்லா ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கான ''அரைவரி விடுப்பு'' போதுமான பாதுகாப்பு அடிப்படையில் புதிய தீர்வை அமைப்பை அறிமுகப்படுத்தியமை ஆகியனவற்றை உள்ளடக்கியிருந்தன. இச் சீராக்கங்கள் உள்நாட்டுத் தயாரிப்புத் துறையில் பெருமளவு தாக்கங்களை ஏற் படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் நிலைபேறுடைய ஆற்றல்மிக்க கைத்தொழில் கொள்கை இன்னமும் குறைவாகவே இருக்கின்றது.

வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்கான எல்லை கட்டுப்படுத்தப்பட்டிருப்ப தன் காரணமாகக் கைத்தொழில் துறை முன்னணித் துறையாக விளங்குவதைத் தெளிவாகக் காணமுடிகின்றது. மனித மற்றும் ஏனைய மூலவளங்களின் பயன் பாட்டுத் திறனை உயர்த்துவதன் பொருட்டு ஒரு உண்மையான முயற்சியின்மூலம் சந்தை விசைகளைப் பிரதிபலிப்பதற்கு உறுதியானதும் தாக்கம் மிக்கதுமான கைத்தொழில் கொள்கைகளையும், உபாயத்தையும், இலக்குகளையும் வடிவமைக் கின்ற முதலீட்டு ஆதரவு நிகழ்ச்சித் திட்டமும் மிக இன்றியமையாததாகத் தேவைப்படுகின்றது.

தற்போதைய கைத்தொழில் சூழ்நிலையின்மீது அனைத்துக் குறிப்பிட்ட கட்சிக் காரர்களினிடையேயும் நடத்தப்பட்ட கலந்துரையாடல் தொடங்கிய பின்னர் கைத்தொழில் துறையின் தடைகளையும் பலவீனங்களையும் பரீட்சிக்கவும் நாட்டிற் கான கைத்தொழில் உபாயங்களை வடிவமைப்பதற்காகவும் மூத்த அலுவலர்களைக் கொண்ட குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. இது ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். புதிய தொழில்நுட்பம், தகுதிமிக்க முகாமைத்துவம், கைத் தொழில் அடிப்படைப் பன்முகப்படுத்தல், போதுமான ஊக்குவிப்புக்களுக்கான ஏற்பாடு ஆகியவற்றினூடாகக் கைத்தொழில் உற்பத்தியை முன்னேற்றுதல், தனியார் துறை முதலீடுகளை விரிவடையச் செய்வதற்கான சூழ்நிலையை அபி விருத்தி செய்தல், ஆராய்ச்சி அபிவிருத்தி சார்ந்த தனியார் துறையை ஊக்கு வித்தல் ஆகியன கைத்தொழில் கொள்கையை வடிவமைப்பதில் நெருங்கிய கவனத்தில் எடுக்கவேண்டிய சில முக்கிய துறைகளாகும். இவ்வுபாயங்கள் சிறிய கைத்தொழில் துணைத்துறைகளையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட வேண்டும். ஏனெனில் தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய தொழில் நுட்பங்களைப் பின்பற்றல் ஆகியவற்றினூடாகப் பயன் பெற்றுக்கொள் வதற்கு இங்கு பெருமளவு உள்ளார்ந்த வளம் காணப்படுகின்றது.

உறுதியான பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கு அபிவிருத்தியும் பொருளாதார உள்ளார்ந்த வளப் பணிகளின் சரியான முகாமைத்துவமும் மிக இன்றியமையாதனவாகும். இக் கருத்தில் ஒரு நாட்டின் போக்குவரத்து தொடர் பூட்டல் முறை பொருளாதாரத்தின் திறன் மட்டத்தினை அதிகரிப்பதற்குத் தேவையான சார்புப் பணிகளை வழங்குவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இலங்கையில் போக்குவரத்து முறையில் குறிப்பாக பயணிகள் போக்குவரத்தில் காணப்பட்ட குறைபாடு அபிவிருத்திக்கானதொரு தடையாகத் தொடர்ந்தும் இருக்கிறது. பொதுமக்களுக்குத் திருப்திகரமான போக்குவரத்துப் பணிகளை வழங் கும் பொருட்டுத் தனிப்பட்ட பேருந்துப் பணிகளைத் தொழிற்படுத்துவதற்கு அரசாங்கம் தனியார் துறைக்கு அனுமதியளித்தது. சந்தையில் தனிப்பட்ட தொழிற்பாட்டாளரையும் புகுவதற்கு அனுமதித்த பின்னர் தனியார் பயணிகள் பேருந்துப் பணிகளில் குறிப்பிடத்தக்களவு முதலீடு இடம்பெற்றிருக்கிறது. இப் பணி அரசதுறைப் பணிகள் மீதான சுமையைக் குறிப்பிடத்தக்களவில் குறைத்தது. தனியார்துறை நீடித்த பயணிகள் பணிகளை வழங்குகின்றபோதும் அதன் தொட க்க முதலீடு இப்பொழுது அற்றுப்போய்விட்டது. தற்பொழுது சொத்துக்களைப் புதுப்பிக்கும் பிரச்சினை தனிப்பட்ட தொழிற்பாட்டாளர்களைப் பொறுத்தவரை கவனத்திற்குரியதாகவுள்ளது. வீதிப் போக்குவரத்துப் பணிகளில் ஏற்படும் பெரும் ஊர்திப் பழுதுகளைத் தவிர்ப்பதற்குப் புதுப்பித்தலுக்கான ஏற்பாடு மிக இன்றி யமையாத தேவையாக இருக்கின்றது. இம் முக்கிய விடயத்தைப் பொறுத்த வரையில் மேலாண்மையாளர்கள் தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு மிகத் தேவை யான நெறிமுறைகளையும், மதியுரைகளையும் வழங்கவேண்டியிருக்கின்றவேளையில் அரசதுறைப் பணிகளின் தகுதியையும் அதிகரிக்க வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

இறை, நாணயக் கொள்கை வழிமுறைகளினது செயலாற்றத் திறனின் மீதான இணைந்த செயலாற்றம் மீளாய்வு செய்யப்படுவதுடன் உயர்ந்த வளர்ச்சி வீதத்தை அடைவதற்கு துறைவகைப்படியான அபிவிருத்தியின் ஒருங்கிணைந்த முயற்சிகள் தாக்கம்மிக்க பேரளவுப் பொருளாதார உபாயத்தினுல் போதுமானஅள விற்கு ஆதரவளிக்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் கேள்வி முகாமையின் சுமை நாணயக் கொள்கையில் கூடியளவிற்கு வீழ்ந்த வேளையில் அரசின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து பெரும் பணவீக்கத் தாக்கம் தோன்றியது. முன் னேற்றமான வரவு செலவுத் திட்டக் கொள்கை 1983 இன் பின்னர் இப்போக் கினை மாற்றியதுடன் 1984 இன் நாணயக் கொள்கை வழிமுறைகளுக்கும் தாக்கம் மிக்க விதத்தில் உதவியது. ஒன்றுசேர்ந்த வரவுசெலவுத் திட்டப் பற்று குறைகள் உயர்ந்தமட்ட சேமிப்புக்களை உள்ளடக்கிய தனியார் முதலீட்டு ஊக்கு விப்பு ஆகியவற்றினூடாக மிகையான திரவத் தன்மையைக் குறைக்கும்பொருட்டு இறைச் சமநிலையற்ற தன்மையைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேலும் வலு வாக்குவதனையும் வற்புறுத்த வேண்டும்.

வரவு செலவுத் திட்ட சமநிலையற்ற தன்மையைக் குறைப்பதற்கானதொரு முன்னேக்கிய நடவடிக்கை வருவாய் அமைப்பின் செழிப்பு, நெகிழ்ச்சித்தன்மை ஆகியவற்றின் மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலமாகவே ஏற்பட்டிருக்கிறது. நலன்புரி வழிமுறைகளை மேலும் கட்டுப்படுத்தாமலும் ஏற்கனவே அடையப்பட்ட சமூக நலன்களுக்கு ஊறினை ஏற்படுத்தாமலும் மீண்டெழும் செலவினத்தைக் குறைப்பதற்கான சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டேயுள்ளன. மீண்டெழும் செலவின முகாமை உற்பத்தியியல் மற்றும் கணக்கியல்களை முன்னேற்றுவதற்கான வழிமுறைகளின்மூலம் வலுவாக்கப்படவேண்டும். வருவாய் அடிப்படையை விரி வாக்கல் வரி செலுத்துவோரின் சிறந்த உடன்பாடுகளுக்காகப் பயன்மிக்க வழி முறைகளை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றினுல் அரசிறையின் அதிகரிப்பில் விரும் பத்தக்க மட்டம் தோற்றுவிக்கப்பட வேண்டும். பரந்தளவு பொருளாதார நோக் கங்களைக் கருத்திற் கொள்கையில் முதலீட்டு ஊக்குவிப்புக்கள் மற்றும் வரி விடுப்புக்களின் திருத்தத்திற்கான காலம் கனிந்திருக்கின்றது. கடந்த ஆண்டறி க்கைகளில் வலியுறுத்தப்பட்டவாறு அரசதுறையின் வர்த்தக, தயாரிப்புத் தொழில் முயற்சிகள் இலாபத்தில் தொழிற்பட வேண்டியதுடன் பங்கிலாபங்களை அரசிற்குச் செலுத்தவும் வேண்டும். அரசதுறை முயற்சிகளின் மீளமைப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தனியார் துறையினுல் சிறந்த முறையில் தொழிற்படுத்தத்தக்க அரசின் சில வர்த்தக, கைத்தொழில் முயற்சிகளை அரச கட்டுப்பாட்டிலிருந்தும் விடுவிக்கும்பொழுது அதுபற்றிக் கவனமாகச் சிந்திக்க வேண்டும். எனினும் குறிப்பிட்ட சில அரச முயற்சிகளைத் தனியார் மயப்படுத்தும் கொள்கை, அரசதுறை முயற்சிகள் அதன் முகாமையையும். திறனையும் முன்னேற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட பின்னரே நடைமுறைப்படுத்தப் படல் வேண்டும்.

தொழில்வாய்ப்பு மற்றும் வருமானப் பங்கீட்டு நோக்கங்களை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியின் உயர்ந்த வீதத்தை அடைதல் தற்போதிருக்கும்

உள்ளார்ந்த ஆற்றலின் வளர்ச்சியினுல் வழங்கப்பட்ட நன்மையை அனைத்து துறைகளிலும் வழிப்படுத்துவதன்மூலம் சமமான பொருளாதார செயற்பாட்டினை அடைய முடியும். உள்ளார்ந்த அமைப்பில் குறிப்பாக நீர்ப்பாசனம், நீர்மின்வலு, நில அபிவிருத்தி ஆகியவற்றிலான உயர்ந்தளவு முதலீடுகளின் நிலை ஆற்றல்மிக்க சென்மதிநிலுவை நிலைமையுடன் உயர்ந்த மட்டத்தில் பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு பொருத்தமான கொள்கை முனைப்புக்களின் அடிப்படையில் தற்பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ளது. சாத்தியப்படத்தக்க குறுங்காலத்தில் தலைக்குரிய வருவாயை விரைவாக அதிகரிப்பதற்குத் தேவையான யதார்த்த பூர்வமான தன்மையுடன் தற்போதைய உலக பொருளாதார நிலைமைகளின்கீழ் தேவைப்படும் மென்மையானதும், அமைப்பு சீராக்கத்தின் இடர்மிக்க செயற்பாட்டிற்குமான நம்பிக்கையை வழங்குவதற்குப் பொருளாதாரக் கொள்கைகளின் உறுதியும் நிலையான தன்மையும் வலுவாக்கப்படல் வேண்டும்.